# கலைச்செல்வி

KALAICHELVI



ஆனி
1965

விலை
25 சத

இன்னும் சில தினங்களில்

அதிக பக்கங்களுடனும்
அதிக விஷயங்களுடனும்

# வரதரின் பலகுறிப்பு

(தமிழ் டைரக்டரி)

1965 - 66ம் - ஆண்டின் பதிப்பு
உங்களுக்குக் கிடைக்கும்.

இதுவரை உங்கள் பிரதியை உறுதிப் படுத்தாவிட்டால் இன்றே எழுதுங்கள்.

விலை ரூபா 10. 00 மட்டுமே.

வரதர் வெளியீடு
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!

விசேஷபயிற்சி பெற்ற நெசவாளர்களால்
உற்பத்தி செய்யப்படும்

சேலைகள்

வேட்டிகள்

சால்வைகள்

துவாய்கள்




படுக்கைவிரிப்புகள்
கைலேஞ்சிகள்
சேட்டிங்
சட்டைத்துணிகள்

புதிய டிசைன்கள் கண்கவர் நிறங்கள்
சிறந்தரகங்கள்

நீடித்த உழைப்பிற்கும், கெட்டிச் சாயத்திற்கும்
உத்தரவாதம்

தொழிற்சாலை:
கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலடி
அளவெட்டி.




தயாரிப்பாளர்கள்:-

**RVG பீடிக் கம்பெனி,**

34, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

---

**நினைவுமலர்கள் வெளியிடுவோரே!**

**பாடசாலை அதிபர்களே!**

**புத்தக ஆசிரியர்களே!**

**பத்திரிகை நிர்வாகிகளே!**

குறைந்த செலவில்

## சிறந்த 'புளக்'குக்கள்

செய்ய வேண்டுமானால்

எங்களுக்கு எழுதுங்கள்,

# Sri Lanka Block Makers

131, MESSENGER STREET - COLOMBO

## உங்கள் வயது 18க்குமேற்பட்டுவிட்டதா?

அப்படியாயின், உங்கள் சரியான விலாசம் எழுதப்பட்ட முத்திரையுடன் கூடிய தபால் உறையொன்றை அனுப்புங்கள்.

உங்களுக்குத் தேவையானவை, உங்கள் குறைபாடுகள், மனதில் இருக்கும் யாவற்றையும் நான் அறிவேன். நான் அனுப்பும் அந்த விபரங்களைப் பார்ப்பதினால் நீங்கள் புதுமை அடைவீர்கள். ஆண் பெண் பேதம் அல்லது மதபேதம் இல்லை. இன்றே உங்கள் விலாசத்தை அனுப்பி உங்கள் வாழ்க்கையைப் பற்றி நான் கூறும் விபரங்கள் உண்மையானவையா எனப் பாருங்கள், இன்னும் எந்தவகையான காரணத்திற்காகவோ மனவேதனை, தொல்லை துன்பம் இருப்பின் அதைத் தீர்த்துவைத்து எண்ணத்தை நிறைவேற்றித் தருவேன். இரகசியம் வெளியிடப்படமாட்டாது.

பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி

# பி. எம். திசநாயக்கா,

ஆருத எண்ணெய் தலைமைக் காரியாலயம்,

கம்பளை.

---

ஓர் நற்செய்தி!

# யானை ஸ்பெஷல் பீடி

# SPECIAL ELEPHANT BEEDI

குணம் நிறைந்ததும் சுறுசுறுப்பைக் கொடுப்பதும்

## யானை ஸ்பெஷல் பீடிகளே!

தெரிவு செய்யப்பட்ட புகையிலையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு செய்யப்படுவது

## யானை ஸ்பெஷல் பீடிகளே!

உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும் உங்களுக்கு நன்மை தருவதும்

## யானை பீடி ஸ்பெஷல் பீடிகளே

# யானை பீடிக் கம்பெனி

கொழும்பு-12

உங்களுக்குத் தேவையானசகல விதமான
புடைவைத் திருசுகள், றெடிமேட்
சேட்டுக்கள், சிறுபிள்ளை உடுப்புகள்
சூட்கேஸ் வகைகள் மற்றும்
சாய்ப்புச் சாமான்கள் யாவும் குறைந்த
விலையில் பெறலாம்.

# ஸ்ரீ முருகன்
# பான்சி ஹவுஸ்

266/3. பருத்தித்துறைவீதி நல்லூர்



# படிமுறை அட்சர கணிதம்

108 நாட்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும்
விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம்
1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்:

**A. J. ஆசீர்வாதம்** B.Sc. (Lond)

(ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

6ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60
7ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60

உங்கள் பிரதிகளுக்கு:-

# ஆசீர்வாதம்
## அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 274

# வாழும் பிரச்சினை

சிங்களர், தமிழர், முஸ்லிம் ஆகிய பிரதான இனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசீய அரசாங்கம் நம் நாட்டை ஆள்கின்றது.

நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னர், இப்போதுதான், தம் பிரச்சினைகள் தீரும் என்ற நம்பிக்கையுடன் சிறுபான்மையினம் இந்நாட்டில் வாழ்கின்றது.

அன்னியன் ஆண்டகாலத்தில், பல்வேறு இனமக்களிடையேயிருந்த பரஸ்பர நம்பிகையும் சுமுகமான உறவும் மெல்ல மெல்ல மீள்கின்றது.

மக்களின் உணர்ச்சிக் குதிரையை வகுப்புவாதச் சாட்டையினால் முடுக்கிப் பதவிக்கு வரலாம் என்ற பத்தாம் பசலிக்கொள்கை மெல்ல மெல்ல வீழ்கின்றது.

பொன்னான இந்தச் சூழ்நிலையைக் கண்ணேபோற் காக்க வேண்டிய கடப்பாடு நமது - சிறுபான்மை இனத்தினது - பிரதிநிதிகளுக்குண்டு.
ஏனெனில்,

பெரும்பான்மையினரின் ஒரே பிரச்சினை - ஆளும் பிரச்சினை.

சிறுபான்மையினரின் உயிர்ப் பிரச்சினை - வாழும் பிரச்சினை.

சூழ்நிலையைக் குழப்பினால் அவர்களால் ஆளத்தான் முடியாது; நம்மால் வாழவே முடியாதே!

தமிழரசுக் கட்சியின் பதினால்வரும் தமிழ்காங்கிரஸின் மூவரும் தேசீய அரசின் உறுப்பினர்கள். அவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கலாம் - அவற்றைக் காட்டிக் கொள்ள வேண்டாம்! கொள்கை வித்தியாசம் இருக்கலாம் - அவற்றை வைத்துக் குழப்பம் விளைவிக்க வேண்டாம்! சொந்தக் கோபதாபங்கள் இருக்கலாம் - ஆனால், பரஸ்பர நிந்தனையில் இறங்க வேண்டாம்! கட்டுண்டோம் பொறுத்திருந்தோம்; காலம் மாறிக்கொண்டே வருகின்றது. வெண்ணெய் திரண்டுவரும் வேளையில் தாளியுடைந்த கதையாக நம் வரலாறு மாறிவிடக்கூடாது.

தமிழர்களுக்கு நன்மை செய்ய முன்வந்துள்ள தலைவர்கள், நன்மையைச் செய்யாவிட்டாலும், தீமையையாவது செய்யாமலிருக்க வேண்டும்!

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். ''கலைச் செல்வி" யில் நீங்கள் எதிர்பார்க்கும் புதிய அம்சங்களைப் பற்றிய ஆலோசனைகளை எழுதியிருக்கின்றீர்கள். அவையனைத்தும் நமது ஆசிரியர் குழுவினுற் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன காலப்போக்கில் அவை சிறிது சிறிதாகக்'கலைச்செல்வி'யிற் புகுத்தப்படும். புதிய தொடர்கதை ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

நமக்குக் கிடைக்கும் கடிதங்களிலிருந்து ஈழத்து மாணவ, மாணவியரின் ஆதரவு முழுவதும்''கலைச் செல்வி'க்கே யுண்டு என்பதையறிந்து பெருமையடைகின்றோம். பெரியவர்களுக்கும், அதே வேளையில் மாணவ, மாணவியர்க்கும் பயன் தரக் கூடிய விஷயங்களைக்''கலைச்செல்வி" யில் வெளியிடுவதானல் இன்னும் அதிக பக்கங்கள் தேவை இப்போதைய நமது பொருளாதார நிலை பக்கங்கள் அதிகரித்தலை அனுமதிக்காது. ஆனல் நீங்கள் மனம் வைத்தால் இது சாத்தியமாகும். உங்கள் இலக்கிய நண்பர்களிடையே ''கலைச் செல்வி', யைப் பற்றிப் பிரச்சாரஞ் செய்து அவர்களைச் சந்தாதாரராக்குங்கள். அளவெட்டி தெற்கைச் சேர்ந்த இராமச்சந்திரன் என்ற அன்பர் 18 சந்தாதாரர்களைப் புதிதாகச் சேர்த்துப் பணமனுப்பியுள்ளார். இந்த அன்பருடைய உதாரணத்தை நீங்களும் பின்பற்றலாமே!

இந்த இதழில்'' விடிவு காண்போம்"கவிதையைஎழுதியபெரி'சண்முகநாதன், வளர்ந்து வரும் புதிய எழுத்தாளர்; சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர், மட்டக்களப்பு தேற்ருத்தீவைச் சேர்ந்த சி. தங்கவேல், "வெட்டினளே!'' என்ற கவிதையை எழுதியுள்ளார். திருகோணமலை மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தின் உப செயலாளர்"புரட்சிபாலன்'' நல்ல இலக்கியரசிகர்; 'நிழலைத் தேடி" என்ற கதையின் மூலம் இப்போது ''கலைச் செல்வி" வாசகர்கட்கு அறிமுகமாகின்ருர். ''ஏக்கம்''கதையின் ஆசிரியை''மலர் மகள்'' திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியிற் பயில்கின்ருர். இவருடைய சிறுகதைகள்' ஈழநாடு' இதழில் வெளியாகியுள்ளன.

''கணவர்கள் ஒழிக!'' என்ற சுவையான நாடகத்தைஎழுதிய''மலைமான்'' நுவரெலியாவில் வாழ்கின்ருர்,''நம்நாட்டு வாசகர்" பகுதிக்குக் கட்டுரை எழுதுபவர்கள் பாஸ்போட் அளவிலுள்ள தங்கள் புகைப்படங்களையும் அனுப்பக் கோருகிறோம்.

—ஆசிரியர்

---

அடுத்த இதழில்:

## இலங்கை - இந்தியர் பிரச்னை தீர.....!

அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய
அரசியற் கட்டுரை
''தமிழன் மகன்'' எழுதுகின்ருர்

# கடமை அழைக்கிறது!

## ச.வே.பஞ்சாட்சரம்

பிஞ்சு நிலாப் பிறைத்துண்டு முலைகள் தாங்கிப்
பித்தாக எனைச்செய்யும் பெண்ணே! அள்ளிக்
கொஞ்சுநிலா வதனத்துக் குமரீ! மங்கைக்
குலமணியே! கோவிலுக்குச் சிலையே! என்றன்
நெஞ்சுநிலாப் படகேறும் மயிலே! சூளை
நீற்றறையில் பூச்சுனைகள் செய்தோய்! ஏங்கித்
துஞ்சி நிலாத் துடிப்பாரும் வாழ்வைத் தந்த
தூயவளே! தூரத்தோர் அழைப்பைக் கேளாய்!

கடலோரக் குடிவாழ்க்கை! காற்றின் மோதல்!
காட்டாற்றுப் படகோட்டம்! சுழிகள்! ஈர்ப்பு!
இடியேற்று மின்னல்நாள்! ஏக்கம்! அச்சம்!
எரிகாட்டு நடமாட்டம்! எங்கும் வெம்மை!
முடியேற்ற மலைவாழ்வு! முனியுங்கூதல்!
மொய்த்தின்னல் இப்படியே எனைவாட்டுங்கால்
மிடிதீர்க்க வந்தவளே! மேலுங் கேளாய்
மேம்பாட்டைத் தந்தகுரல் அழைக்கும் என்னை

பாடாத குயிலெல்லாம் கூவிப் பாடும்!
பருகாதசுவையெல்லாம் பல்கிச் சேரும்!
ஆடாதமயிலெல்லாம் ஆடித் தாவும்!
அணுகாத சுகமெல்லாம் அணுகிச் சூழும்!
ஓடாத தேனாறு ஓடும் பொங்கி!
ஒளிராத அழகெல்லாம் ஒளிரும் பூத்து!
தேடாது வந்த உறவு! ஆனால் அன்பில்
தெவிட்டாத தமிழ்த்தாயின் அழைப்பும் ஏற்பேன்!

குற்றாலம் நீர்வீழ்ச்சி வீழ்ந்தா லென்ன!
குளிர்வாடை பொழில் தோறு மூர்ந்தா லென்ன!
வற்றாது எழில் நதிகள் பாய்ந்தா லென்ன!
வண்ணங்கள் உலகெங்கும் நிறைந்தா லென்ன!
உற்றாரும் ஊருலகும் அழைத்தா லென்ன!
உன்னருகில் யாவுமுள என நின் றேற்கு
கற்றாவின் குரல்போலுந் தமிழின் வாஞ்ஞைக்
கதறல்கள் கேட்குதடீ! செய்வேன் பாட்டு!




படைவீரரிடையே நிலவும்சல்யூட் வணக்கமுறை எப்படி வந்து தெரியுமா? சரித்திரகால நாட்களில் மேற்கு நாடுகளில் அரசனின்முன் வீரர்களை ஒருவரோடொருவருடன் பொருதும்படி செய்வர். அவர்களில் வெற்றியீட்டியோருக்குப் பார்வையாளர்களின் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஒரு பெண்ணே பரிசுகளை வழங்கினாள். அவளை அழகின் அரசி என்றனர்.

போட்டி ஆரம்பமாகுமுன் வீரர்களனைவரும் அந்த அழகின் அரசி முன்பாக அணிவகுத்துச் செல்லவேண்டும். அப்போது அவளைக் கடந்து செல்லும்போது அவள் ஜொலிக்கும் எழில்பூண்டவள் என்று தெரிவிப்பதற்காக ஒரு கரத்தை யுயர்த்திக் கண்களின் குறுக்கே பிடித்தார்கள். இதுவே இன்றைய "சல்யூட்" முறை!

∴

கடந்த மாதக் "கலைச்செல்வி"யிற் குறிப்பிட்டிருந்தபடி சில பிரமுகர்களின் இல்லப்பெயர்களை அனுப்புகின்றேன்:- "அயோத்யா": சமுக ஜோதி C. தியாகராஜா; அருந்ததி: வ. அ. அளகக்கோன் M. P; கொட்டில் : சர். கந்தையா வைத்தியநாதன்; குஞ்சிதசரணம் : முதலியார் செ. சின்னத்தம்பி கீதாஞ்சலி: ஜி.ஜி.பொன்னம்பலம் M P; திருவடி: திருமதி இரத்தின நவரத்தினம்.

— த. சிவாநந்தன்
யாழ்ப்பாணம்.

∴

முயலும் ஆமையும், போன்ற நூற்றுக் கணக்கான கதைகளை உங்களுக்குத் தெரியும். இந்தக் கதைகளில் பெரியதத்துவங்களும், உண்மைகளும் மண்டிக்கிடக்கின்றன. ஆனால் உலகெங்கும் நிலவும் இவை யாரால் எழுதப்பட்டன தெரியுமா? ஆமாம்! ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஈசாப் ('AESOP') என்பவரே இவற்றை எழுதியவர். இவர் ஓர் அடிமையாக வாழ்ந்தவர்.

∴

நம் தலையில் எத்தனை மயிர்களிருக்கின்றன என்று எண்ணிவிட முடியுமா உங்களால்? ஆனால் அதையும் கணக்கிட்டார்கள் சிலர். செம்பாட்டு நிற மயிருள்ளவர் தலையில் (மேல் நாடுகளில்) 109,000 மயிர்கள். ஏனைய பளுப்பு நிறம் கொண்டவை 140,000.

பல நூற்றாண்டுகளுக்குமுன் சீனர், ஜப்பானியர் முதலானோர் மயிர்களைக் கொண்டே கயிற்றுவடங்களைச் செய்தனர். அப்படியான ஒன்று இன்றும் பிரித்தானியாவின் மியூசியத்திலிருக்கிறதாம். அது பல்லாயிரம் அடி நீளமும் 3டன்களுக்

கதிகமான நிறையும்கொண்டதாகின்றன. அதுவும் கேவலம் பூச்சி
கும். – ஒரு தலைமயிர் 4அவுன்ஸ் பாரத்தைத் தூக்கக் கூடியது.

∴

மனிதனும் காலாலேயே நடக்கின்றான். மிருகங்களும் காலாலேயே நடக்கின்றன. ஆனால் மிருகங்களை மட்டுமே கால்நடை என்கின்றோமே, ஏன்? மனிதனுக்கு மூன்றுவித நடைகள் இருக்கின்றன. ஒன்று, அவனுடைய மனநடை அல்லது ஒழுக்கம் இரண்டு அவனுடைய சொல் அல்லது பேச்சு, எழுத்து நடை. மூன்று, அவனுடைய சாதாரண கால்நடை. ஆனால் மிருகங்களுக்கு ஒரேயொரு நடை—கால்நடை மட்டுமே உண்டு. ஆகவேதான் அவைகளைக் கால் நடை என்கிறோம்.

—கிருபானந்தவாரியார்.

∴

இன்று பேசுகிறோமே ஆங்கிலம், இப்படி இருக்கவில்லை அது அன்று. கரடுமுரடானதாக ஆங்கில நாடுகளிலேயே ஒருவர்க்கொருவர் புரிந்து கொள்ளக் கடினமானதாயிருந்தது. எனவே ஆங்கிலத்தை எல்லார்க்கும் புரியும்படியான ஒரே மொழியாக 'சுத்தப்' படுத்தவேண்டியிருந்தது. அதன்படி அன்று அரசனுடைய அரண்மனையிற் பேசப்பட்டதே தெளிந்த ஆங்கிலமாகக் கொள்ளப் பட்டது. இதுவே நாளடைவில் KING'S ENGLISH ஆனது.

∴

அதிக பாரத்தைத் தூக்கக்கூடிய சக்திவாய்ந்த பிராணி எது என்று தெரியுமா? யானை என்று எண்ணுகிறீர்கள்? யானையைவிட அதிக பாரத்தைச் சுமக்கவல்லவை இருக்கின்றன. அதுவும் கேவலம் பூச்சி புழுக்களில்.

உதாரணமாக நிலத்தில்வாழும் ஒருவித வண்டு (GROUND BEETLE) தன்னைப் போன்ற 180 மடங்கு அதிகபாரத்தைச் சுமக்கவல்லது. புற்றீசல் (HUMBLE BEE) தன்னைப்போல 300 முறை அதிகமான நிறையைச் சுமக்கக் கூடியது இதைவிட இராட்சத பலம் கொண்டது EARWIG என்ற பூச்சி. இதனால் 550 தடவைகள் தன்னைப் போன்ற பாரத்தைத் தூக்கமுடியும். இவற்றைப் பார்க்கும்போது யானை என்னத்தைச் செய்கின்றது?

∴

முன்பு, அரசாங்கம், பத்திரிகைகளை எடுப்பதற்குப் பாடுபட்டது. ஆனால் இப்போது, பத்திரிகைகள் அரசாங்கத்தை எடுத்துவிட்டன!

–பீலிக்ஸ் டயஸ்.

∴

பிராணிகளனைத்திற்கும் ஓய்வு என்பது அவசியம். எல்லாப் பிராணிகளுக்கும் நித்திரையே ஓய்வைத் தருவது. அப்படியானால் மீன்களும் நித்திரை செய்கின்றனவா என்று கேட்பீர்கள். ஆமாம்! மீன்களும் ஆற்றின் அடிமட்டத்திலோ ஆழ்கடலிலோ நித்திரை செய்கின்றன. ஆனால் கண்களை மூடி நாம் நித்திரை கொள்ளுமாப்போல அமைதியாக நித்திரை கொள்வதில்லை. மீன்கள் நித்திரை செய்யும்போது கண்கள் திறந்திருக்கும். ஏனெனில் மீன்களுக்குக் கண் இமைகள் கிடையா.

பாம்புகளுக்கும்கூட ஒழுங்கான இமைகளில்லை, மூடிக்கொள்ள எனவே பாம்புகளும் நித்திரை செய்யும் போது கண்கள் திறந்தபடியே இருக்கும். அப்போது அவற்றின் கண்களைப் பார்த்தால் அதில் ஒருவித 'வெறித்த நோக்கு' இருப்பதை அவதானிக்கலாம்.

# —பத்தாம் பக்கம் - பத்தாம் பக்கம் - பத்தாம் பக்கம்—

திடுக்கிடும் பயங்கரத் துப்பறியும் கதைகளா? மயிர்க்கூச் செறியும் மர்ம நாவல்களா? காளையருக்கேற்ற காதற் கதைகளா? எது வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான கட்டுரை கதை கவிதை நாடகம் ஆசிரியருக்குக் கடிதங்கள் முதலியவை உடனுக்குடன் எழுதிக்கொடுக்கப்படும். கட்டணம்: சாதாரண தமிழில் ஒரு சதுர அங்குலத்திற்குப் பத்துச் சதம் மட்டுமே மரபுத் தமிழ் மணிப்பிரவாளம் பச்சைத் தமிழ் கொச்சைத் தமிழ் முதலியவற்றிற்குத் தனித் தனிக் கட்டணங்கள் உண்டு. 'ஆர்டர்" தரும் போது எத்தனை சதுர அங்குலம் தேவை என்பதையும் எந்தத் தமிழில் எழுதவேண்டும் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். வி.பி.பி. ஆர்டர்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா: எமகாதகன்" எழுத்துத் தொழிலாளர் "கதா சரித் சாகரம்" யாழ்ப்பாணம்—64

2 மட்டக்களப்பு மாடி வீதியில் சுருட்டுக் கடைச் சுப்பையாவிற்குச் சொந்தமான எட்டடுக்கு மாளிகை நேற்றுப் பின்னேரம் தொடக்கம் காணமற் போய்விட்டது மாளிகையில் 63 அறைகளும் ஒரு பெரிய குடும்பமும் ஐந்து சின்னக் குடும்பங்களும் இருந்தன. அங்கிருந்த கன்னிப்பெண்கள் எத்தனைபேர்? காளையர் எத்தனைபேர்? என்ற விபரங்கள் நாளைய பத்திரிகையில் அறிவிக்கப்படும். மாளிகை இப்போது எங்கேயிருக்கின்றது என்பதை அறிவிப்போருக்கு ஓர் அறை இனமாகக் கொடுக்கப்படும். தபாற் பெட்டி $7\frac{1}{2}$, மே | பா "தினவதந்தி" கொழும்பு.

3 வாழ்க்கையில் வெறுப்புற்று விட்டீர்களா? இன்றுடன் உங்கள் கவலைகளை ஒழியுங்கள். ஸ்வாமி மரணனந்தர் எழுதிய "சுவர்க்கமடையச் சுலப வழிகள்" என்ற நூலை வாங்கிப் படியுங்கள். உங்கள் ஒவ்வொருவரின் கையிலும் அவசியம் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம் பொலிடோல் குடித்தல், ரயிலிலிருந்து குதித்தல், தூங்கிச்சாதல் முதலிய இலகுவான முறைகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. திருப்தியின்றேல் பணம் வாபஸ்-குசேலர் பண்ணை, கொம்பனித்தெரு, கொழும்பு.

4 நமது கல்லூரிக்கு எதிர்புறமாகவுள்ள பெண்கள் விடுதிச் சாலைக்கு, நம் கல்லூரி மாணவர்கள் எழுதும் காதற் கடிதங்களைப் பட்டுவாடாச் செய்வதற்கு நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த தூதுவர் தேவை. சந்தர்ப்பத்திற்கேற்றபடி ஊமையாகவோ செவிடாகவோ குருடாகவோ நடிக்கக் கூடியவராகவும் உயரப்பாய்தல், ஓட்டப்பந்தயம் அவலட்சணப் போட்டி முதலியவற்றில் பரிசு பெற்றவராயும் இருப்போர் விரும்பப்படுவர் — மாணவர் தலைவர், மன்மதா கலாசாலை, கோவலபுரம்.

(இது விளம்பரயுகம். இன்னுஞ் சில ஆண்டுகளில் நமது பத்திரிகைகளில் எப்படியான விளம்பரங்கள் வெளியாகும் எனக் கற்பனை செய்ததின் விளைவே, மேலேயுள்ள விளம்பரங்கள்!)

**வாழ்க்கையிலே வறுமையால் துடித்தவள், கல்வியில் திறமைசாலியாக விளங்கினாள். ஆனால் பரீட்சை அவளுக்குப் படுதோல்வியைப் பரிசாக அளித்தபோது, அவள் செய்த முடிவு...?**

# மலர்மகள்

சுகந்தி! இந்தக் கடிதம் உன் கண்களிற் சிக்கி கருத்தைக் கிளறுமா என்பது நிச்சயமாக இல்லாத நிலையில் கடமையுணர்ச்சி என்ற ஒன்று கைகளைத் தூண்ட இதை எழுதுகின்றேன். ஆசையுடன் வாசிப்பாயோ அல்லது வாசிக்கவே முடியாத வானுலகம் சென்றாயோ? எதுவுமே தெரியாது! என் சோகச் சுமையைக் குறைப்பதற்காகவாவது நான் எழுதித்தான் ஆகவேண்டும்.

சுகந்தி! என்மனச் சாந்திக்குச் சமாதி கட்டுகின்றது உன் சோக முடிவு! மிடியின் கொடிய பிடியிலே அகப்பட்டு மீள முடியாமல் உழன்ற உன் குடும்பத்தாரைக் காணச் சகிக்காமல் ஓடி மறைந்து விட்டாயே! பாசத்தைக் கொட்டிப் பரிவைக் குழைத்து வளர்த்த உன் பெற்றோருக்கு நீ அளித்த பரிசு இது தானா? இதோ உன் பைத்தியக்கார முடிவு பைத்தியமாக்கியிருக்கிறதே உன் அம்மாவை! எதிர்பாராத முடிவைக் கண்ட ஏக்கத்தால் இடிந்து போயிருக்கிறார்கள் உன் சகோதரிகள். உன் அருமைத்தம்பி கூட என்ன வென்று தெரியாமல் ஒன்றும் புரியாமல் திகைத்துப் போய் நிற்கிறான். உன் முடிவைச் சிறிதளவு கூட எதிர்பாராத நான்—உன் சிநேகிதி சிந்தை மரத்துவிட்ட நிலையில் நிற்கிறேன், என்கண்கள் இரண்டும் இரு சிறு குளங்களாக மாற ஆரம்பிக்கின்றன!

கடந்த கால வாழ்க்கை என் மனத்திரையிலே விரிகிறது. நீ ஒரு கல்லூரி மாணவி. எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் உன் கல்லூரிப்

துடிக்கச் செய்தது. அவர்கள் இலங்கை அரசை வற்புறுத்தி ஒரு தூதுக் குழுவைத் தில்லிக்கு அனுப்பினர்.

"உங்கள் நாட்டு மக்களை எங்கள் நாட்டுக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு நாம் உணவு கொடுப்போம் உறைவிடம் கொடுப்போம். உடைகள் கொடுப்போம்" உரிமைகள் அனைத்தையும் கொடுப்போம். அவர்கள் தங்கள் உடலுழைப்பை மட்டும் கொடுத்தாற் போதும் என்று மன்றாடினர்கள்.

"இல்லை" என்றுரையா இதயமுடைய இந்தியா, இலங்கைத் தலைவர்களின் சொற்களை நம்பியது. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்குச் செல்லலாம் என அனுமதியளித்தது.

வலிந்து வரவழைக்கப்பட்ட இம் மக்களின சந்ததியினர்தான் இன்று பிரச்னைக்குரியவர்களாயிருக்கின்றனர்!

இங்குவந்த தொழிலாளர்கள் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலுமா வாழ்ந்தார்கள்? பாலும் பழமும் உண்டு பஞ்சணை மெத்தையிலா படுத்தார்கள்? நம் நாட்டுப் பணத்தை மூடை மூடையாகக் கட்டித் தம் நாட்டிற்கா அனுப்பினர்கள்?.

இல்லையே!

அப்படியானல் ஏன் இவர்களுக்கு இன்னல் விளைவிக்கப்படுகின்றது? இவர்கள் ஏன் இளிப்பிற்கும் பழிப்பிற்கும் இலக்காகின்றார்கள்? வீடுமின்றி நாடுமின்றி இவர்கள் ஏன் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்?

இதயம் உடையவர்கள், ஏழைத் தொழிலாளர்களில் இரக்கம் உடையவர்கள். இந்நாட்டின் மேம்பாட்டில் அக்கறை உடையவர்கள், இவற்றை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டுகிறார்கள் என்பது ஒரு குற்றச் சாட்டு.

இவர்கள் செல்வத்தைச் சுரண்டவில்லை. செழித்து வளர்ந்த ரப்பர் மரங்களைத் தான் சுரண்டுகிறார்கள் அதனால்நாட்டிலே பணம், பாலாகப் பெருகுகின்றது. தேயிலையைக்கிள்ளுகின்றார்கள், தேசம் செழிக்கின்றது.

இந்தியத் தொழிலாளர்களால், இந்நாட்டுத் தொழிலாளர்கள் தம் வேலைவாய்ப்பை இழக்கின்றார்கள் என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

இவர்கள் உழைக்கப்பிறந்தவர்கள்; உழைப்பதற்கு வந்தவர்கள். வாழ்நாள் முழுவதும் வஞ்சகமற்று உழைக்கத் தயாராயிருப்பவர்கள். இலங்கையர்களால் இவர்களைப் போல் உழைக்கவே முடியாது. தோட்ட முதலாளிகளிடையே வாக்கெடுப்பு நடத்தினல், "இந்தியத் தொழிலாளரே வேண்டும்" என்பது தான் ஏகோபித்த முடிவாயிருக்கும்.

இந்தியத் தொழிலாளர்களின் இன்றியமையாமையை — அவர்கள் இங்கு வலிந்து வரவழைக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை—அவர்களுடைய உழைப்பின் காரணமாகச் செழித்த பொருளாதார வளத்தின் அடிப்படையிலேதான் நமது வாழ்க்கை என்னும் மாளிகையே கட்டப்பட்டிருக்கின்றது என்ற பேருண்மையை இந்நாட்டின் ஆட்சிப்பீடத்தினர் உணர்ந்தால், நீதியும் நியாயமும் மனிதாபிமானமும் மிக்க முறை

டங்கள் தெரியவில்லை. ஆனால் நீ கல்லூரிப்படிப்பை நிறுத்திக்கொண்டதும் வீட்டுக் கஷ்டங்கள் தெரிய வருகின்றன. குடும்பத்தில் மூத்த பெண்ணாகிய உன்னால்தான் குடும்பம் உயரவேண்டும். நீதான் உழைத்து உன்குடும்பத்தைஉயர்த்த வேண்டும். ஆனால் உத்தியோகம் என்ன தெருவில் போட்டா கிடக்கிறது தேடுவதற்கு முன்னால் காலிற் சிக்குப்பட?

ஒருநாள்.மாலைக்கும் இரவிற்கும் இடைப்பட்டநேரம். வானக்கடலில் வண்ணப்படகாக மிதந்துகொண்டிருக்கிறது வட்டநிலா. தங்கத் தகட்டை உருக்கிவார்த்ததுபோன்ற அழகு. கண்ணுக்கினிய காட்சி. முற்றத்தில் முருங்கைமரம் ஒன்றுடன் சாய்ந்தபடி உட்கார்ந்திருக்கிறாய். அகன்ற ஆகாயத்தையும் ஊடுருவிச் சென்று அப்பால் எதையோ தேடுவதுபோலிருக்கிறது உன்பார்வை. உன் சோகத்தைக் காணச் சகிக்காமலோ என்னவோ வெண்புகாருள் புகுந்து மறைந்துகொள்கிறதுவெண்ணிலா.

நான் பின்புறமாகவந்து உன் கண்களைப் பொத்துகிறேன். உன்னை எப்படியும், என்றும் உள்ளத்தில் களிப்புடன், உதட்டில் சிரிப்புடன் இருக்கச் செய்யவேண்டும் என்பதே என் நோக்கம். உன் விழிகளின் ஓரங்களில் திரைகட்டியிருந்த கண்ணீர் முத்துக்கள் கைகளில் பட்டதும் திடுக்கிட்டுவிடுகிறேன்.

"ஏன் சுகந்தி அழுகிறாய்?"

"இல்லையே!" என்ற நீ வரட்டுப் புன்னகையை வலிய வரவழைக்கின்றாய் உதடுகளில்.

"சுகந்தி சொல்லமாட்டாயா? உன் உயிர்ச்சிநேகிதியாகிய எனக்கு உன் கவலைகளிற் பங்கு உண்டல்லவா?"

"சாந்தி என் கவலையின் காரணம் தெரியாதா உனக்கு? பணத்தைக் கொட்டிப் படிக்கவைத்த என் பெற்றோருக்கு நான் அளித்த பரிசு என்ன? அளிக்கப் போவதுமென்ன? என் அம்மாவும் சகோதரர்களும் படும்பாட்டைக் காண என்னால் சகிக்க முடியவில்லையே! இந்தப் பாழும் உலகத்தில் இன்னுமா வாழ வேண்டும்?"

"காரிகையே,கவலையடையாதே. கட்டுண்டாய், பொறுத்திருப்பாய். காலம்மாறும், சுகந்தி! உன் நல் எண்ணங்கள் உனக்கு நல்வாழ்வு தரும். உன் இலட்சியங்கள் இனிது நிறைவேறும். துன்பத்தைக்கண்டு துவண்டுபோகாதே. துணிவுடன் நின்று போராடு. வாழ்க்கைப் போராட்டத்தில் நேர்நின்று போர் செய்யத் துணிவும் மனோதிடமும் வேண்டும். இதயத்தை இழந்து விடாதே. நிச்சயம் வெற்றிகிடைக்கும், படைத்தவன் படியளப்பான் அல்லவா?" நாடகபாணியில் ஆரம்பித்து ஒரு குட்டிப் பிரசங்கமே செய்கிறேன் நான்.

உன் வதனத்தில் நம்பிக்கை ஒளி பிறக்கிறது. இன்பம் இழையோடுகிறது என் உள்ளத்தில்.

நாட்கள் சில நகர்கின்றன.பாடசாலைக்குச் சென்ற எனக்கு இன்பச் செய்தியொன்று காதில் தேனைவாரி இறைக்கின்றது, பல்கலைக்கழகப் புகு

## பொன்னூர் மேனியளே!

நல்ல பல சுவையான அம்சங்களுடன், இரசிகர்கட்குகந்த இலக்கிய விருந்தாகக் "கலைச்செல்வி" மிளிர்வது கண்டு மெச்சுகிறேன். சுடச் சுடரும் பொன்போல் "கலைச் செல்வி" என்றென்றும் ஒளிர்வாள் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

கல்முனை. அழ-நோணிஸ்

முகத் தேர்வின் முடிவுகளை மறு பரிசீலனை செய்து மேற்படிப்புக்காக மேலும் சிலரைத் தெரிவுசெய்துவிட்டார்களாம். எல்லோருக்கும் மேலே உன் பெயர்தான் இருக்கின்றது!

மகிழ்ச்சி எனக்கு இறக்கைகட்ட நான் பறந்து வருகின்றேன் உன்னிடம். ஆனால் சுகந்தி! பேயறைந்தவரைப்போலிருக்கும் உன் அம்மா இறக்கைகளை வெட்டிவிட்டாரே? என்னைக் கண்டதும் கட்டிப்பிடித்து கதறியழுது கண்ணீர்வடிக்கின்றாரே! நீ மறைந்துவிட்ட செய்தியறிந்து மனமிடிந்து நிற்கின்றேன் நான்.

துக்கம் என் தொண்டையை அடைக்கிறது. வாயைத்திறந்து பேசவே முடியவில்லை.

சுகந்தி! நீ ஏனடி இந்த முடிவிற்கு வந்தாய்? அவசரப்பட்டு அனைத்தையும் கெடுத்துவிட்டாயே நீ. கஷ்டங்களும் கவலைகளும் நிறைந்ததுதான் வாழ்க்கை. அவற்றைக்கண்டு கலங்காதவன்தான் மனிதன். அதை உணரமுடியவில்லையா உன்னால்?


இரண்டொரு நாளின் பின்னாலேதான் உன் மறைவின் விபரங்கள் எனக்குத் தெரியவருகின்றன. வீட்டிலுள்ள அனைவரும் படுத்துறங்கியபின் நீ தனியே வெளியேறுவதை யாரோ கண்டார்களாம். அவசர அலுவலாகச் சென்ற அவரால் அதைப்பற்றி அப்போது சிந்திக்க முடியவில்லையாம். அடுத்தநாள் உன்னைக் காணாது அனைவரும் தேடினார்களாம். எங்கோ வெகு தொலைவிலுள்ள ஆற்றங்கரையிலே உன் ஆடைகள் மட்டும் இருந்தனவாம்! உன் உடலைக்கூடத் தேடிக் கண்டுபிடிக்கமுடியவில்லையாம்!

சுகந்தி! என் மனத்தின் ஏதோ ஒரு மூலையில் நம்பிக்கையின் சிறிய ஒளி தெரிகின்றது. கதைகளில், சினிமாவில், நாடகத்தில் வருவதைப் போல – ஆற்றிலிருந்து உன்னை யாராவது மீட்டிருந்தால்...?

சுகந்தி, என் அடிமனம் இதை உண்மையாகவே நம்புகின்றது. உன்னால் உன் அருமை அம்மாவையும் அன்புச் சகோதரிகளையும், உயிர்ச் சிநேகிதிகளையும் விட்டுப் பிரியவே முடியாது! ஒரு கணநேரப் பைத்தியம் உன்னைத் தவறானவழியில் செலுத்தியிருந்தாலும் நீ தப்பியிருப்பாய் என்றே நான் நம்புகின்றேன். தற்கொலையால், உன் குடும்பப்பிரச்சனை தீருமா? உன் வாழ்க்கையின் இலட்சியத்தை மீண்டும் நினைத்துப்பார், அந்த நினைவு உன்னை இங்கே ஓடிவரச்செய்யும்...

ஆனால், நீ உண்மையாகவே இறந்திருந்தால்... இந்தத் துன்ப நினைவை என்னால் தாங்கவே முடியவில்லை... என் கை சோர்கின்றது. கண்ணீர் இக் கடிதத்தை நனைக்கின்றது...

# நம்நாட்டு வாசகர்



**செ. பாக்கியநாதன்**

(போஸ்ட் மாஸ்டர், தலவாக்கொல்லை)

பெரிய பெரிய கட்டுரைகள், ஆயிரம் பக்கக் கதைகள் என்ருல்த் தான் புத்தகங்களாக வாங்கிக் கொண்டு 'சிவனே' என்று ஒரு மூலைக்குப் போய்விடலாமே. இது முடிகிற செயலா இன்று? இந்தக் குறைபோக்கத் தான் சஞ்சிகை! அந்த விதத்தில் குமுதம் ஏ ஒன்! சக்கையற்ற சாரம் அதில்! துணுக்குகளாக விறுவிறுப்பாகத் தினம் தினம் மெருகுடன் மலர்வதால் சுவையுடன் முகம் சுளிக்காமல் ஆரம்ப முதலேபார்வையகற்ருமல் வாசிக்கக்கூடிய "என்சைக்ளோ பீடியா" அது! இன்றைய ஜெட்யுகத்துக்கு இதுவே தேவை!

"கலைமகள்" ஆழ் கடல்! சுழியோடித் தான் முத்தெடுக்க வேண்டும் நாம். மற்றப் பத்திரிகைகளில் ஊறினவர் கலைமகளைத் தொட முயலுவதும் அருமை, ஏனெனில் சாக்கடை நீர் அதில் தேங்குவதில்லை.

தத்துவக் கதைகளுக்காகவே எனக்குக் கலைமகள். தத்துவம் என்ருல் எல்லாம் தத்துவமா? எதுவுமே, விளங்கும் தத்துவமாயிருக்கவேண்டும். சாதாரண வாசகனுக்கு விளங்காது எழுதப்படும் தத்துவம் இருந்தென்ன, இறந்தென்ன? கலைமகளின் தத்துவக் கதைகளெல்லாம் சுருங்கக்கூறி விளக்கிடும் எளிமையானவை. தொடர்நாவல்களத்தனையுந் தத்துவப் பெட்டகங்கள் தானென்ருலும் எல்லாம் பலதரப்பட்டவை. எல்லாவற்றிலும் ஒரே தத்துவம் இல்லை. எனவேதான் அவற்றின் மணம் குறைவதில்லை. கதைகளின் முடிவு எதிர்பாராதவை! எந்த எதிர்பாராத முடிவும் சிந்தையைத் தூண்டத்தானே செய்யும்? ஆமாம்! கலைமகள் வாசகன் ஒவ்வொன்றையும் வாசிக்கும்போதுதானும் சிறிது சிந்திக்கிருன்.' தன்னையும் சிந்திக்கத் தூண்டுவதுதான் தரமான வாசகனது விருப்பமும்கூட. சுருங்கக் கூறின் கலைமகள் நடமாடும்- ஒரு சங்கப்பலகை!

கல்கண்டைப் பற்றியும் நான் கொஞ்சம் கூறவேண்டும். ஏனெனில் ஒரு காலத்தில் கல்கண்டிற்காக நாங்கள் "கியூ"வில் தவமிருந்ததுமுண்டு.

பிஞ்சு உள்ளங்களின் பிரதிபலிப்பு அது. அன்றெல்லால் "காதல்" போன்ற பதங்களின் நிழலைக்கூட மருந்துக்கும் தேடியெடுக்கமுடியாது அதில். இன்றோ கல்கண்டில் பலதும் சுவையுடன் கூடிவிட்டது. ஆமாம்! கல்கண்டின் அதே வாசகர் கூட்டமாகிய நாங்கள் இன்று வளர்ந்து விட்டோம். கல்கண்டு தானும் எங்களோடு வளர்ந்துவிட்டது. அதே வளர்ந்த வாசகர் குவியல் அதற்கு. அதன் ஆசிரியரும் எங்களுடன் கூட தானும் வளர்ந்துவிட்டார். இதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

# சினிமாச் செய்திகள்

காளிதாசரின் வடமொழி நாடகங்கள் உலகப்பிரசித்தி பெற்றவை. இங்கிலாந்திற்குச் செகப்பிரியர் எப்படியோ, அப்படியே இந்தியாவிற்குக் காளிதாசரும். உலகப் புகழ் பெற்ற காளிதாசரின் வாழ்க்கை, "கவிகாளிதாஸ்" என்ற பெயரிற் படமாகின்றது. நடிகர்திலகம் சிவாஜிகணேஷன், காளிதாஸாக நடிக்கும் இப்படம் கர்நாடக இசையின் பெருமையை எடுத்துக்காட்டும் வகையில் அமையுமாம். பட்டு பிலிம்ஸார் தயாரிக்கும் "நீலவானம்" என்ற படத்தில் சிவாஜி - தேவிகா ஜோடியை நாம் மீண்டும் பார்க்கலாம். "படித்தால் மட்டும் போதுமா"வைத் தயாரித்த ரங்கநாதன் பிக்சர்ஸார் சிவாஜியுடன் ராஜ்ஸ்ரீயை இணைத்து ஒரு படம் எடுக்கத் திட்டமிட்டுள்ளனர். "ப"வரி டைரக்டரான பீம்சிங், பிரபல எழுத்தாளர் "பிலஹரி" எழுதிய கதையொன்றைப் படமாக்குகின்றார். சிவாஜிதான் இப்படத்தின் கதாநாயகன். முழுநீள நகைச்சுவைப் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். சிவாஜி பிலிம்ஸார், கே.பாலச்சந்திரன் கதையை எழுதி வருகிறார். படத்தில் சிவாஜியுடன் நாகேஷ், சந்திரபாபு முதலியோரும நடிப்பார்களாம்

ஜெமினி "சந்திரலேகா" விற்குப் பின் சர்க்கஸ் காட்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் படங்கள் வெளிவந்தது குறைவு, சர்க்கஸ் கதையொன்றை வைத்து இப்போது ஆர். ஆர். பிக்சர்ஸார் ஒருபடத்தைத் தயாரித்து வருகின்றனர். எம். ஜீ. ஆர், சரோஜாதேவி மனோகர், நாகேஷ் முதலிய பலரை இப்படத்திற்பார்க்கலாம். எம்.ஜி. ஆர் சரோஜாதேவி ஜோடிசேர்ந்து நடிக்கும் "மணப் பெண்" படத்தின் பெயரை மாற்றுவதற்குத் தயாரிப்பாளர்கள் ஆலோசித்து வருகின்றார்களாம்.

பத்மினி பிக்சர்ஸாரின் "ஆயிரத்தில் ஒருவன்" படத்தில் சரோஜாதேவியுடன் நடித்து முடித்த எம். ஜி. ஆர், இப்போது, "அடிமைப்பெண்", "அரசகட்டளை" ஆகிய படங்களிலும் சரோஜாதேவியுடனேயே நடித்துவருகின்றார். "அரசகட்டளை"யைப் புரட்சிநடிகரின் அண்ணன் சக்ரபாணி டைரக்ட் செய்கின்றார்.

நூறு படங்களில் நடித்துச் சினிமாத்துறையில் மகத்தான சாதனையை நிலைநாட்டிய சில நடிகர்களுக்குச் சென்னை ஊட்லன்ட்ஸ் ஓட்டலிற் சிறப்பான விருந்துபசாரமொன்று நடைபெற்றது. சிவாஜி கணேசன், நாகையா, நம்பியார், எஸ். பி. பிள்ளை, என். டி. ராமராவ், ஏ. நாகேஸ்வரராவ், கும்முடி, ரமணரெட்டி, சூரியகாந்தம், சாவித்திரி ஆகியோரே இதுவரை நூறு படங்களில் நடித்தோராவர்.

கமலாவை ராஜா காதலித்தான். சமூக ஏற்றத்தாழ்வை மனதிற்கொண்டு அந்தக் காதலைக் கருக்க முனைந்தனர் ராஜாவின் பெற்றோர். சாவிலே சுகம் காணக் காதலர் தீர்மானித்தபோது......?

# வாழ்வோம் வா!

—இரா. இளஞ்செழியன்—

"ராஜா!"

இளங்காற்றின் அசைவில் ஏற்பட்ட சலசலப்பினூடே எழுந்த நளினமான குரல் ராஜாவின் இதயத்தை நெகிழச் செய்தது. நிமிர்ந்து பார்த்தான்: நிலவொளியில் தெரிந்த பட்டுக் கன்னங்களில் நீர்க்கோடுகள் பளபளத்தன.

"அழுகிறாயா கமலா?"

"இல்லையே!" அவள் குரலின் நடுக்கத்தை அவன் புரிந்துகொண்டான்.

"ராஜா! உங்களால் மட்டும் எப்படிக் கலங்காமல் இருக்க முடிகிறது?"

"நானும் உன்னுடன் சேர்ந்து அழுவதால் வேதனை தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறாயா கமலா!"

"இல்லை ராஜா! எனக்கு...... எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை"

அவன் மௌனமாக அவளை நோக்கினான். அவள் கருவிழிகளில் அவன் உருவமேதெரிவது போன்ற ஒரு தோற்றம். அவள் இதயத்தின் பிரதிபலிப்பா அது?

ஆடுகாலில் நின்ற தடித்த பூவரசின் இலையசைவில் நிலவின் ஒளி மாறி மாறித் தரையில் விழுந்தது. கிணற்றங்கட்டின் மேற்புறத்தில் ஒரு வெடிப்பில் இருந்து கிறீச்சிடும் சில்வண்டு; தொலைவில் சரசரக்கும் பனைஓலைகள்; கோடிவளவில் திடீரென்று விழுந்த தேங்காயின் 'தொம்' என்ற ஒலி; அவன் விழிப்படைந்து கொண்டான்.

"கமலா நீ விதியை நம்புகின்றாயா?"

"இல்லை!?

"பின்...?"

"உங்களை ...!, உங்களுடன் என்னை இணைக்கக் காத்திருக்கும் வாழ்வை,-இரண்டையுந்தான் நான் நம்பிக்கொண்டிருக்கின்றேன்."

ராஜாவின் உடலில் சிலிர்ப்பு ஓடிற்று. "கமலா! வாழ்வில் மட்டுமல்ல சாவிலும் இணைக்கப்படலாம்அல்லவா?"

"ராஜா! இணைப்பு எப்படிஏற்பட்டால் என்ன? அந்த இணைப்பில் கிடைக்கின்ற நிறைவுதான் எனக்கு வேண்டும். அது ஒரு கணநேர நிறைவேயாயினும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்"

அவள் குரலில் பிணைந்திருந்த உறுதி ராஜாவைப் புல்லரிக்கச் செய்தது. அவள் கரங்களைப் பற்றிக்கொண்டான். அவள் உடலில் ஓடிய நடுக்கம் அவன் பிடியில் தெரிந்தது.

"கமலா! நீ இத்தனை உறுதி கொண்டவளாக இருப்பாய் என்று

கனவிலும் நான் நினைத்திருக்கவே யில்லை. நான் பாக்கியசாலி!"

"நேரமாகிறது. வீட்டில் தேடுவார்கள்." அவன் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டாள். "உங்கள் முடிபு என்ன ராஜா!"

"கமலா! நாளை இதே நேரம் உனக்காகக் காத்திருப்பேன். நம்மை இணைப்பதற்கு எது தயங்காது முன்நிற்கிறதோ, அதே முடிபுடன் காத்திருப்பேன், போய்வா!"

அவள் பிரியமனமின்றித் தயங்கித் தயங்கிச் சென்றுள். அவள் சென்று மறைந்ததும் ராஜா வீட்டை நோக்கி நடந்தான்.

"இணைப்பு எப்படி ஏற்பட்டால் என்ன, அதில் கிடைக்கின்ற நிறைவுதான் எனக்குத் தேவை" கமலாவின் குரல் இன்னமும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருப்பது போன்ற உணர்வு.

வீட்டுக்கு வந்து கட்டிலில் சாய்ந்து கொண்டான். நினைவுகள் சுழன்று வந்தன. கமலா அவன் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் உறுதியையும் நினைத்துப் பெருமைப்பட்டாலும் இதயத்தில் வேதனை கனத்தது. தன் மேல் தனக்கே நம்பிக்கையில்லாத ஓர் அதைரியம். கமலா கொண்டிருக்கும் உறுதியில் பாதியாவது அவனிடமிருந்தால்......

உலகம் மட்டுமன்றி வாழ்க்கையுமே அந்தகாரத்தில் ஆழ்ந்துவிட்டது போன்ற உணர்வு. இமைகளை மூடிக்கொண்டான்.

கிருக்கல் அறியாத வைகறைப் பொழுது, வெளியே கோழி கூவியது கட்டிலை விட்டு எழுந்து சென்று யன்னலைத் திறந்துவிட்டான் ராஜா! பெருமாள் கடவைப் பிள்ளையார் கோவில் மணி கேட்டது. அதன் வெண்கல நா இசைத்துவிட்ட நாதச் சுருளைகள் அறையெங்கும் நிறைந்து விட்டாற்போல் தோன்றியது. அந்த நாதத் துடிப்பில் கமலாவின் குரலும் ஒன்றியிருப்பது போன்ற உணர்வு.

மலர ஆரம்பித்துவிட்ட நந்தியாவட்ட மலர்களின் மணம் நாசியைத் துளைத்தெடுத்தது.

மீண்டும் வந்து கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

வேதனையின் கனம் இதயத்தை அழுத்தியது.

சீதனத்திற்காகக் காதலையே பொசுக்கிவிட நினைத்திருக்கும் தந்தை, அவருக்கு அடங்கின பிள்ளையாய் வளர்ந்து ஊரில் நல்ல பெயர் எடுத்தாயிற்று, அந்த நல்ல பெயர் அவனுக்கோ அல்லது அவளுக்கோ இருவருமே எதிர்பார்த்திருக்கும் இணைப்பின் நிறைவைக் கொடுக்கும் என்று நம்பலாமா?

பொழுது நன்ருக விடிந்துவிட்டது. வீட்டிலும் தெருவிலும் தளிர்த்துவரும் ஜீவ சலசலப்பு. சுழன்று வரும் காலைக் காற்றின் இதம். நீண்டுவரும் ஒளிக்கீற்றுக்கள். அறையை விட்டு வெளியே வந்தான் முகம் கழுவிவிட்டுச்சமையலறைக்குள் நுழைந்தபோது அம்மா அவனை ஒரு மாதிரிப் பார்த்தாள்.

"உனக்கு என்னடா பிடித்துவிட்டது ராஜா! கண்ணெல்லாம் கலங்கிச் சிவந்து கிடக்கிறதே"

கண்மட்டுமா, மனம் கூடத்

தான் கலங்கியிருக்கிறது என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. மௌனமாகத் தேனீரை உறிஞ்சினன்.

"நான் கேட்கிறேன், பேசாமல் இருக்கிருய்". திரும்பவும் கேட்டாள் அம்மா.

"ஒன்றுமில்லே!"

"எனக்குத் தெரியும் ராஜா! நீ கமலாவை இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிருய்!"

"அம்மா!"

"ராஜா! திரும்பவும் இந்த வீட்டில்சண்டையைக்கிளப்பிவிடாதே நேற்றுச் சுந்தரம் வந்துபோன திலிருந்து அப்பா ஒரு மாதிரி இருக்கிருர். அவர்கள் எங்களுடைய சபை சந்திக்காரரில்லே. அவர்களைத் தட்டிக் கழிக்க வேணுமென்பதற்காகத் தான் சீதனத்தைக் கூடக்கேட்டு கமலாவின் சாதகத்தை அப்பா விலக்கிவிட்டார். நேற்றுப் பின்னேரம் மானிப்பாயிலிருந்து ஒருகுறிப்பு வந்திருக்கிறது நல்ல சீதனம். பொருத்தமென்ருல் அடுத்த மாதம் கலியாணம். நீ கமலாவை மறந்து விடுகிறதுநல்லது. அப்பா சொன்ன படி செய். போ!"

மௌனமாக எழுந்து நடந்தான் ராஜா. இதயத்தின் கனத்தை அம்மா இன்னும் ஏற்றிவிட்டிருந்தாள். ஷேர்ட்டை மாட்டிக் கொண்டு முன்வாசலுக்கு வந்தான், விழிகள் அவனையறியாமல் முருக்கம் கதியால் வேலிக்கூடாக அடுத்த வீட்டை நோக்கின. கமலா விருந்தையில் நிற்பது தெரிந்தது. குளித்து விட்டாள் போலும்; ஈரக் கூந்தலை உலர்வதற்காக விரித்துப் போட்டிருந்தாள். மஞ்சள் நிறச் சட்டைக் கேற்ற பச்சை வர்ணச் சேலையில் அவள் அழகு ததும்பிநின்றது. அப்போதுதான் இதழ் விரித்த புது மலரில் குலுங்கி நிற்கும் பனித்துளி போன்று அந்தத் தோற்றத்தில் ஒரு தனிக் கவர்ச்சி. பட்டுப்போன்ற கன்னங்கள் குதப்பி நிற்கும் சிவப்பு. அதரங்கள் ஏந்தி நின்ற முறுவலில் படிந்திருந்த வேதனை. விழிகளின் பார்வையில் மிதந்து வந்த ஏக்கம். அந்த ஏக்கத்தின் பின்னல் அவனை நம்பி நிற்கும் உறுதி.

ராஜா ஒரு முறை தன்னைச் சிலிர்த்துக்கொண்டான். மனதில் ஒரு புதிய வேகம் தோன்றி வேதனையின் அழுத்தத்தை மூடிக் கொள்வது போலிருந்தது. தெருவில் ஏறிப் பிள்ளையார் கோவிலை நோக்கி நடந்தான்.

பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னுல் ஒரு கேணி கேணியை அடுத்து கண்ணுக் கெட்டிய தூரம் வரை நீண்டு பரந்த வயல்வெளி. தங்கக் குளம்பைப் பூசி ஜொலிக்கும் கிழக்கு வானையும் பச்சை வயல் வெளியையும் பிரித்து மெல்லிய கருங்கோடு முத்தாற்போல் வரிசையாக நிற்கும் பனைமரங்கள். கேணியை அடுத்திருந்த மடத்தில் தூணேடுசாய்ந்தவாறு கால்களை நீட்டிக் கொண்டான ராஜா. விழிகள் நீண்ட வயல் வெளிக்கப்பால் எங்கோ நிலைத்திருந்தன. காற்றில் நழுவி நெற்றியில் சரிந்த கேசச் சுருளை ஒதுக்கி விட்டவன் பின்னுல் காலடி ஓசை கேட்டுத் திரும்பினன். கமலாவின் அண்ணன் சுந்தரம் வந்துகொண்டிருந்தான்.

"சுந்தரம்!" ராஜா சிரிக்க முயன்ருன்.

"ராஜா!"

"உன்னேடு கொஞ்சம் பேச வேணும் சுந்தரம்!"

"எதைப்பற்றி?" மடத்துத் திண்ணையில் ஒரு காலைத் தூக்கிப் போட்டபடியே சுந்தரம் கேட்டான்.

"அப்பா உன்னேடு அப்படிப் பேசியிருக்கக்கூடாது!"

"பின் எப்படிப் பேசியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிருய்?'

'அது......எனக்குச் சொல்லத் தெரியவில்லை சுந்தரம்!"

"ராஜா! நீ இதில் குழப்பமடைவதற்கு ஒன்றுமே இல்லை, அவர் கேட்ட சீதனம் என்னிடம் இல்லை. நான் திரும்பிவிட்டேன். அவர் கடுமையாக ஒன்றும் பேசவில்லையே!" திண்ணையில் அமர்ந்து கொண்டான், சுந்தரம்.

"சுந்தரம்! அப்பா சீதனத்தை உயர்த்திக் கேட்டதில் உனக்குக் கோபம் இல்லையா?"

"இதில் நான் கோபிப்பதற்கு என்ன இருக்கிறது ராஜா! தன் மகனுக்கு அவர் சீதனம் கேட்கிருர். இருந்தால் கொடுக்கலாம். இல்லாவிட்டால் நம் சக்திக்கு ஏற்ற வகையில் நாம் பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல ராஜா! திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுபவை. அந்த நியமனப் பிரகாரம் உனக்கும் ஒருத்தி எங்கோ பிறந்திருக்கிருள். கமலாவுக்கும் ஒருவன் பிறந்திருக்கிருன்."

"சுந்தரம்! நீ என் மனதைப் புரிந்து கொள்ளாது பேசுகிருய்"

"இல்லை ராஜா! உன்னை நன்ருகப் புரிந்து கொண்டுதான் பேசுகின்றேன். நீ பண்புள்ளவன் கண்ணியமானவன்' அறிவைப் பரப்புகின்ற ஆசிரியன். கமலாவை உயிருக்குயிராய்க் காதலித்தாய். ஆனல் காதலுக்குத் துணிவு வேண்டும். அது உன்னிடம் இல்லை. அப்படி இருந்தாலும் அப்பாவுக்கு அடங்கிய பிள்ளையான உன்னல் அதை வெளிப்படுத்த முடியாது. அவர் சொல்லைக் கேட்பதுதான் நல்லது" என்ருன் சுந்தரம்.

"சுந்தரம்!" ராஜா பேசமுடியாது திணறினன்.

"ஆனல் ஒன்றை மட்டும் முக்கியமாகச் சொல்ல விரும்புகின்றேன் ராஜா! இத்தனை நாட்களும் நீயும் கமலாவும் உயிருக்குயிராய்ப் பழகியிருக்கலாம். ஆனல் அந்தப் பழக்கம் வாழ்வின் இணைப்பை உண்டாக்குவதற்கு ஏற்றதல்ல என்று தெளிவாகத் தெரியும் போது அதைத் துண்டித்துவிடுவது நல்லது. நீயும் வாழவேண்டியவன். என் தங்கையும் வாழவேண்டியவள். இருவர் வாழ்விலும் கறை படுவதை

கொழும்பு நகர விற்பனையாளர்

திரு லெ. முத்தையா

103/14 சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13

நான் விரும்பவில்லை. இனிமேலும் நீ கமலாவுடன் தொடர்பைவைத்துக் கொள்ள மாட்டாய் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் எமது நட்பு இன்னமும் நீடித்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப் படுகின்றேன்.''

''சுந்தரம்!''

''நான் வருகிறேன் ராஜா!''

ஆயிரம் சம்மட்டிகளைக் கொண்டு இதயத்தைத் தாக்கியது போல் இருந்தது ராஜாவுக்கு. அவனுக்காகவேபிறந்து அவனுக்காகவே வளர்ந்து, அவன்மீதுகொண்ட நம்பிக்கையின் உறுதியில் கமலா வாழ்ந்து கொண்டிருக்கும்போது, இவளுக்காக வேருெருவன் எப்படிப் பிறந்திருக்க முடியும்?. அவனுக்காகவும்தான் வேருெருத்தி எப்படிப் பிறந்திருக்க முடியும்?

'உனக்குத் துணிவில்லை ராஜா!' எத்தனை மிடுக்கோடு சொல்லிவிட்டான் சுந்தரம். அவனிடமா துணிவில்லை? இணைப்பின் வெற்றியில் கிடைக்கின்ற நிறைவு, கமலாவின் மகிழ்ச்சிக்கு ஆதாரமாய் இருப்பதில் அவன் துணிவு அடங்கியிருக்குமானுல்......

பிள்ளையார் கோவில் மடத்தை விட்டெழுந்து வீட்டைநோக்கி நடந்தான். ''உன்னையும் என்னையும் இந்த உலகம் வாழவிடாது கமலா!'' இதயம் அழுதது.

நிலாப் புறப்பட்டுவிட்டது. நீல வானில் வெண்ணிற மேகப்பொதிகள் குவிந்து கிடந்தன. உலகமே மோனத் துயிலில் ஆழ்ந்துவிட்டது.

அறையைவிட்டு வெளியேறிக் கிணற்றடியை நோக்கி நடந்தான் ராஜா. நெஞ்சின் முடிவு கால்களில் நடையில் பின்னிக்கிடந்தது.

''ராஜா!''

ஆடுகாலில் நின்ற தடித்த பூவரசின் அருகே நிழல் உருவமாய் நின்றிருந்தாள் கமலா. அவளை நெருங்கிவந்தான் அவன். கரத்தில் இருந்த போத்தில் அவள் பார்வையில் பட்டது.

''கமலா!''

''ராஜா!''

''இந்த உலகம் நமக்கு ஏற்றதல்ல கமலா!''

''எனக்குத் தெரியும். இதைவிட ஏற்ற முடிவு நமக்கில்லை''

ஒரு கணம் மௌனத்தின் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்தது.

''கமலா! நீ இதற்காக மகிழ்ச்சியடைகிருயா?''

''சாவிலும் என் தெய்வத்துடன் சங்கமிப்பதில்பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு'' இதயத்தின் உணர்வுகள் அவள் உதடுகளின் வழியே ஒலிவடிவாய் அரும்பின.

''கமலா! நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான்.'' அவன் குரலில் ஆற்றுமை தொனித்தது.

''இது போதாதா நமக்கு? சாவிலும் ஒன்றுபட்டு நிற்கும் நாம் பெரும் பாக்கியசாலிகள் ராஜா!'' இலைகளுக்கூடாக நிலவின் ஒளிக்கீற்றொன்று அவள் முகத்தில் விழுந்தது. அசாதாரணமான ஒளி அவள் முகத்தில் துலங்கியிருப்பதை உணர்ந்த ராஜாவியப்படைந்தான். எத்தனை நம்பிக்கையுடன் அவனிடம் வந்திருக்கிருள் அவள்.

''ராஜா!''

# வெட்டிஞளே.

சி. தங்கராசா.

வெட்டிஞள் கண்ணுல்
வெருண்டேன் மிகவொளியால்
பட்டென்று பார்த்தேன்
பறந்தோடி விட்டாளே!

கட்டழகியே உந்தன்
கன்னங்கள் எப்படியோ
காட்டவே காட்டாமல்
காரிருளில் மறைந்தாயே

குலைகளின் நடுவினிலே
குடியிருக்கும் மாங்கனிபோல்
வெட்டியவள்மேனி
கட்டழகாய் இருந்ததுவே.

வெட்டிஞள் மீண்டும்
வெறிஓடிப் பறந்ததுவே
அப்போது தானறிந்தேன்
அடித்தது மின்னலெனா!

"உம்!"

"கடைசியாக உங்களிடம் ஒன்று கேட்கின்றேன். கொடுப்பீர்களா?"

"என்ன கேட்கப் போகிருய்?"

"உங்களிடம் ...... உங்களிடமிருந்து ஒரே ஒரு மு....த்...தத்தை எதிர்பார்க்கின்றேன் ராஜா!" நாணம் கலந்திருந்தகுரல்;சொற்கள் தடுமாறி வந்தன.

அவன் உடலில் சிலிர்ப்பு ஓடிற்று. இதயத்தில் என்றுமில்லாத ஒளிபரவியது.

மயக்கத்திலிருந்துதெளிவடைந்தவன்போல் விழித்தான்,

"ராஜா! உங்களுக்குச் சம்மதமில்லையா? என்னை மன்னித்து விடுங்கள்"

"கமலா! நான் முட்டாள். நீ கேட்ட பரிசும், உன் பேச்சும் என் இதயக் கண்களைத் திறந்து விட்டன. எத்தனை நம்பிக்கையோடு நீ இங்கு வந்திருக்கிருய். சாவைக் கூட எத்தனை தைரியத்தோடு தழுவக் காத்திருக்கிருய். நீசாகக்கூடாது. நீ வாழவேண்டும், நான் உன்னை வாழவைப்பேன்,"

"ராஜா!"

அவன் கரம் ஓங்கிச் சுழன்றது. கரத்தில் இருந்த பொலிடோல் போத்தல் சற்றுத் தொலைவில் போய் விழுந்தது.

"கமலா சாவதற்காக நாம் கொண்ட துணிவை ஏன் வாழ்வதற்காகப் பயன் படுத்தக்கூடாது!"

வியப்போடு அவனை நோக்கிஞள் கமலா. "ராஜ்" உங்கள் துணிவோடு துணை நின்று என்னை ஐக்கியப்படுத்தக் காத்திருக்கின்றேன்" அவள் கண்களில் இருந்து "பொல' "பொல" வென்று வழிந்த கண்ணீரை அவன் தன் கரங்களால் துடைத்துவிட்டான். "நாளைக் காலையில் ஐந்துமணிக்குப் புறப்பட்டுவா. காரோடு தெருவில் காத்திருப்பேன். இருவரும் செல்வச்சன்னிதியில் மாலை மாற்றிக் கொண்டு திரும்புவோம். பின்பு யாராலும் எம்மைப் பிரிக்கமுடியாது. அவன் குரலில் உறுதியின் இழை ஓடிற்று. அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான். நான்கு விழிகளினதும் பரிமாறலில் உவகை ததும்பி வழிந்தது. அவள் அதரங்கள் புன்னகை பூத்தன.

"கமலா!"

"உம்!"

"நீ கேட்டபரிசை நாளை இதே நேரத்தில் தருகிறேன் கமலா!"

"ராஜா அவளது" ரோஜாக்கன்னங்கள் சிவந்தன. அவன் காலடியில் விழுந்து வணங்கிஞள்.

முறைப்பையனைக் கல்யாணஞ் செய்ய மறுத்தவள், தன் காதலனுக்காகக் காத்திருந்தாள். இடையிலே கயவன் ஒருவன் புகுந்தான். அப்போது யாருடைய நிழலைத்தேடி ஓடினுள்?

# நிழலைத்தேடி.....!

-புரட்சி பாலன்-

"ராசாத்தி! இது தான் உன் முடிவா? அந்த மூர்த்தியைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போறியா?"

"ஓம், அதுதான் என் முடிவான முடிவு. அதைமாற்றிக்கொள்ள என்னல் முடியாது. உன்னைக் கட்டிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. மான ரோஷமில்லாத குடிகாரனுன உன்னேடு வாழ்வதைவிட ஒருமுழக் கயிற்றுக்கு என்னுடலைச் சொந்தமாக்கலாம்......"

காளிராசா அதற்கு மேலும் அங்கே நிற்கவில்லை. அவன் போய் விட்டான், தாங்கமுடியாத வேதனைச் சுமையைச்சுமந்து கொண்டே போய்விட்டான். புயற்காற்றேடு சேர்ந்த பேய்மழை பெய்து ஓய்ந்து விட்டபின் நிலவும்ஒருவித அசாத்திய அமைதி அந்த இடத்தில் நிலவியது. பெரும் பேய்மழையிலும் ஒடிந்து பூமியில் வீழ்ந்து விடாது தலைநிமிர்ந்தாடும் முல்லைக் கொடி போன்று எவ்விதசஞ்சலமுமின்றித் தன் அன்றுட அலுவல்களில் ஈடுபட முனைந்தாள் ராசாத்தி.

"ராசாத்தி.........!"

"என்னம்மா.........!"

"காளி போய்விட்டானு?.........!"

"ம்............ம்..................!"

வெண்மணலிலே வேரூன்றியிருந்த தென்னை மரமொன்று பேய்மழையின் கொடுமையினல் அடி வேரோடு பெயர்த்தெறிந்திருப்பதைப் போன்று களிமண் தரையில் சாய்ந்து கிடந்த அந்த வயது முதிர்ந்த பெண், ராசாத்தியைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். ராசாத்தி அவனை மானரோஷமற்றவன் என்று சுட்டிக்காட்டிப்பேசியதால்த்தான் அவன் போகிறேன் என்று கூடச் சொல்லாமல் போய் விட்டானே? அவளுடைய மனம் இவ்வாறு எண்ணமுற்றது. ராசாத்தி தனது முறைப்பையனை காளியைக்கல்யாணம் செய்து கொள்ள மறுத்தது தவறு? அல்லது அவள் பெரிய படிப்புப் படித்த மூர்த்தியைக் கல்யாணஞ் செய்து கொள்ள முடிவு செய்திருப்பது தவரு? அவள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள்.

"அம்மா, கனகசபைவாத்தியார் வீட்டுக்குப் போய்ப் படித்து விட்டு வாறன்..." ராசாத்தியின் குரல் கேட்டு அயர்வுநீங்கிக் கண்விளித்தாள் ராசாத்தியின் தாயாரான அந்தப்பெண், புத்தகக்கட்டுகளை விம்மிப் பருத்திருந்த தன்மார்போடு சேர்த்தணைத்த படி நின்றுகொண்டிருந்தமகளைத்தன் ஒளி மங்கியகண்

களினுல் உற்று உற்று நோக்கினுள் ராசாத்தியின் தயார், "பொயிட்டுக் செதியாய் வந்துடம்மா......வர்னம் வேறு இருண்டுகிடக்கிது........."

"சரியம்மா..........."

ராசாத்தி நீண்டு கறுத்திருந்த வானத்தை அடிக்கடி நிமிர்ந்து பார்த்தபடியே அங்கிருந்து நகர்ந்தாள். அவள் வாழும் அந்தக் கிராமத்தில் ஒருகோடியில் கிழக்குத் திசையை நோக்கியவாறு நின்று கொண்டிருந்த ஒரே யொரு பழைய கட்டடத்தைக் கொண்ட பள்ளிக் கூடத்தையும், அப்பள்ளிக்கூடத்தை ஒட்டினுற்போல் அமைந்திருந்த தலைமை வாத்தியார் கனகசபையின் இல்லத்தையும் சென்றடைய ராசாத்திக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. ராசாத்திகனகசபை வாத்தியார் வீட்டுக்குச் சென்ற சமயம் அவர் தம் இல்லத்திற்கு எதிரே இருந்த கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தார். ராசாத்தி தமது வளவுக்குள் நுழைந்ததைகண்டதும் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தபடியே "உள்ளே போய் ஏதாவது படித்துக் கொண்டிரு. கொஞ்ச நேரத்தில் குளித்து விட்டு வந்துவிடுகிறேன்." என்றுஅன்பு ததும்பக் குரல்கொடுத்தார். ரராசாத்தி அடக்கத்தோடு முன் கூடத்தில் போயமர்ந்தாள் அவள் இதயத்தில் எழுந்த உணர்வுகள் அவளை எங்கோ வெகு தூரத்துக் கப்பால் இழுத்துச்சென்றன தான் கொண்டுவந்திருந்த புத்தக மொன்றினுள் பக்குவமாக வைத்திருந்த நிழற் படமொன்றை மெதுவாகத்தன்கரத்தினுல் எடுத்து உற்று நோக்கினுள். அவள் கன்னங்கள் நாணத்தினுல் நன்கு சிவந்தன. உள்ளத்தில் ஏற்பட்ட பருவ உணர்ச்சிகள் அவளை மெய்மறக்கச்செய்தன. எதையோ நினைத்துக் கொண்டவளின் செவ்விதழ்க்கடை யோரங்களில் நாணப்புன்னகை யொன்று அரும்பி மறைந்தது. தன் கரங்களிலிருந்த அந்த வாலிபனின் நிழல் படத்தைத் தன்மார்போடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள். அந்த வாலிபன் அவள் இதயத்தோடு கதைகள் பேசுகிருனே என்னவோ! ரசாத்தி, திறந்து கிடந்த யன்னல்கள் வழியாக வெளியே உற்றுநோக்கினுள். வானில்இரண்டு ஜோடிப் பறவைகள் எங்கோ பறந்துகொண்டிருந்தன. அவள் நினைவலைகள் இதயக்கடலோடு தவழ்ந்து தவழ்ந்து வந்து தழுவிக்கொண்டன.

"ராசாத்தி! நீ என்னை மறந்து விடுவாயா?" இவ்வாறுதான் மூர்த்தி முதல் முதல் அவளை விட்டுப்பிரியும் போது கேட்டான். அவனுடைய அந்தக்கேள்வியில் எதிரொலித்த ஏக்கத்தை உண்மையாக உணரக் கூடியவயதில் அன்று ராசாத்தி இருக்கவில்லை. அழகாகப் பட்டுச் சட்டை அணிந்து கொண்டு துள்ளித்திரியும் பட்டாம் பூச்சிபோல் வளைய வளைய வந்த பருவமது. விளையாட்டுக்குத் துணையாயிருந்தவன் பிரிந்துவிட்டான் என்ற களங்கமற்ற எண்ணம்தான் அவளுக்கு ஏற்பட்டது. விளையாடவேண்டும் என்ற எண்ணம் அவளுடைய மனதில் ஏற்பட்டபோதெல்லாம் அவளுடைய நினைவில் மூர்த்திதான் நின்று சுழன்று கொண்டிருப்பான். அவனோடு மண் வீடு கட்டி, சோறுகறி ஆக்கி விளையாடியவைகளெல்லாம அவளுடைய வஞ்சகமற்ற பிஞ்சுள்ளத்திலே இன்ப நினைவுகளை எழுப்பின. அந்த இன்ப நினைவுகளிலே தன்னை மறந்து இருந்திடுவாள்.

மூர்த்தி அவளுடைய சொந்தமாமாவின் மகன்தான். இளம் வயதிலே பெற்றோரை இழந்து விட்டஅவனை ராசாத்தியின் தாயார்தான் மிக அன்போடு வளர்த்து வந்தாள். மூர்த்தியும்ராசாத்தியும் சிறுவயதிலிருந்த ஒன்ருகக் கிராமப்பாடசாலையில்

படித்துவந்தனர். கிராமப்பாடசாலையில் எட்டாம் படிவத்துக்கு மேல் இல்லாமையால் எட்டாம் படிவத்தில் முதன்மையாகச் சித்தியடைந்த மூர்த்தியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல்யமான கல்லூரியொன்றில் இலவசமாகத் தங்கியிருந்து படிக்க அரசாங்கக் கல்விப் பகுதி ஏற்பாடு செய்தது. அந்த ஏற்பாட்டின் பேரில் மூர்த்தியை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தாள் ராசாத்தியின் தாயார். காலம் கரைந்தது. மூர்த்தி நான்காண்டுகளுக்குப்பின் கிராமத்துக்குத் திரும்பிவந்தான்.

"ராசாத்தி!......நீ எவ்வளவு பெரியவளாக மாறிவிட்டாய்......! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா? மான்விழிகளை ஒத்த உனது கண்கள்......"

ராசாத்தி மூர்த்தியின் கைப்பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நாணத்தோடு விலகியோடினாள். அவன் அவளைத் துரத்திக் கொண்டே அவள் பின்னால் ஓடினான்.

இலவசமாக இந்தியா சென்று படிக்கக்கூடிய அரிய வாய்ப்புக் கிடைக்கவே மூர்த்தி மீண்டும் கிராமத்தை விட்டுக் கிளம்பினான்.

"அத்தான்!...என்னை மறந்துவிடமாட்டீர்களல்லவா?" ராசாத்தி விம்மினாள்.

"ராசாத்தி உன் நிழல்தான் எனக்குத் தஞ்சம். அந்த நிழலைத் தேடி எங்கிருந்தாலும் நான் ஓடி வந்துவிடுவேன்..."

மூர்த்தி போய்விட்டான் ஐந்தாண்டுகள் உதிர்ந்து மறைந்தன. ராசாத்தி எட்டாம் படிவத்தோடே தன் படிப்பை நிறுத்திக் கொண்டாள். குடும்பச்சுமையைச் சுமக்க வேண்டிய பெரும் பொறுப்பும் அவள் தலையிலேயே விழுந்தது. அவளுடைய தாயும் படுக்கையில் விழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மூர்த்தி இந்தியாவில் படித்துப் பட்டம் பெற்றபின் ஒரு பட்டதாரி ஆசிரியராக யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் வேலைக்கமர்ந்தான். மாதாமாதம் ராசாத்தியின் குடும்பத்திற்குப் பணம் அனுப்ப மட்டும்தவறுவதில்லை. கிராமத்திற்கு வரவேண்டும் வரவேண்டும் என்று பலதடவை கடிதம் எழுதியதின் பேரில் இரண்டு மூன்று தினங்கள் கல்லூரியில் விடுதலை பெற்றுக் கொண்டு கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். மூர்த்தியைக் கண்டதும் உள்ளமெலாம் பூரித்துப் போய்விட்டாள் ராசாத்தி. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு ராசாத்தியினுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சை ஆரம்பித்தார் ராசாத்தியின் தாயார்,

"மூர்த்தி! இன்னும் எத்தனை நாளைக்கு வயதுவந்த பெண்ணை வீட்டில் நிரந்தரமாக வைத்திருக்க முடியும்? உன்னிடம் முறைப்படி அவளுடையகையைப்பிடித்துத்தந்து விட்டேனென்றால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடிடுவேன்......நீ என்ன சொல்கிறாய்?"

"மாமி ராசாத்தியைக் கல்யாணம் செய்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை மாமி. ஆனால் படித்துப் பட்டம் பெற்ற நான் படிக்காத பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டால்...நாளைக்கு ஊர் உலகம் என்னைப்பார்த்துச் சிரிக்காதா? எனக்கு மனைவியாக வரவேண்டியவள் பட்டம் பெறாதவளாக இருந்தாலும் ஓரளவுக்காவது இங்கிலீஷ் பேசத் தெரிந்தவளாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னாசை-இன்னும் இரண்டொரு வருசம் போகட்டும் ... அதற்கிடையில் ராசாத்தி இங்கேயே யாரிடமாவது இங்கிலீஷ் படிக்கட்டும் பிறகு பார்க்கலாம்..."

மூர்த்தி முடிவாகச் சொல்லி விட்டுப் போய்விட்டான். மூர்த்தியின் பேச்சு ராசாத்திக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவர்களுடைய அன்பு, வெறும் படிப்பில்

தானா நிலைக்கப்போகின்றது? என்றாலும் மூர்த்தியின் அன்புருவம் அவள் மனத்திரையிலே தோன்றி அந்த ஏமாற்ற உணர்வைச் சிதறடித்தது. ராசாத்தி இங்கிலீஷ் படிக்கச் சம்மதித்தாளே தவிர தாயார் கூறியபடி குடிகாரனை காளிராசாவைக் கட்டிக்கொள்ளச் சம்மதிக்கவில்லை. அவளுடைய நல்லகாலமோ என்னவோ அக் கிராமப் பாடசாலைக்கு ஆங்கிலம் படித்த கனகசபை வாத்தியார் வந்து சேர்ந்தார். அவரும் ராசாத்தியினுடைய நிலையை அறிந்து மனமிரங்கி அவளுக்கு இங்கிலிஷ் சொல்லித்தரச் சம்மதித்தார். அவளும் தினமும் மாலை நான்கு மணியிலிருந்து ஆறுமணிவரை அவருடைய வீட்டுக்குச் சென்று இங்கிலிஷ் படித்துவந்தாள். அவள் அவரிடம் படிக்கத் தொடங்கி ஒருமாத காலம் ஓடிமறைந்துவிட்டது. அவளுக்குப் புதுவாழ்வு அளிக்கப்போகும் தெய்வம் கனகசபை வாத்தியார்தான்,

"என்ன ராசாத்தி! அப்படி யோசிக்கிறாய்...........?"

குரல்கேட்டு அதிர்ந்து நிலைகுலைந்தாள் ராசாத்தி. கரங்களிலிருந்த மூர்த்தியினுடைய நிழற்படத்தை மார்புச்சட்டைக்குள் மறைத்துக்கொண்டு நிமிர்ந்து நோக்கினாள். அசட்டுப்புன்னகை ஒன்று முகத்தில் அரும்ப அவளுக்கு மிக அருகில் திருநீற்றுப்பூச்சுப் பூசிய நெற்றியுடன் கனகசபை வத்தியார் நின்றுகொண்டிருந்தார். அவரைப்பார்த்ததும் இறந்துபோன தன்னுடைய தந்தையை ஒருமுறை நினைவு படுத்திக்கொண்டாள் ராசாத்தி. "ஐயா படிக்கத்தொடங்கலாமா?"

"ம்......... ம்........." என்றவர் அவளை மிக நெருங்கிவந்தார்.

"ராசாத்தி! உன்னிடம் நீண்ட நாட்களாகவே ஒன்று கேட்க வேண்டுமென்று விருப்பம் அதைக் கேட்டால் இல்லையென்று; சொல்ல மாட்டாயே?"

"இல்லை ஐயா கேளுங்கள்...!"

ராசாத்தி அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நின்றாள்.

ராசாத்தி என்னால் தானே உனக்குப்புதுவாழ்வேவரப்போகிறது இல்லையா? அதற்கு முன்னால் என் ஆசையை நீ நிறைவேற்றி வைப்பாயா?........."

"ஐயா! நீங்கள்தரன் எனக்கு வாழ்வளிக்கப்போகும் தெய்வம் உங்களுடைய விருப்பத்தைச் சொல்லுங்கள், நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேன்........'

"ராசாத்தி, இன்று ஒரேயொரு முறைமட்டும் என் ஆசையைத் தணித்துவிடு ராசாத்தி உன் மாம்பழக்கன்னத்தில்......" நடுங்கும் குரலுடன் அவளைமேலும் நெருங்கிய கனகசபை, அவளைத் திடீரென இழுத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டார். அவள் திமிறினாள். அவர்பிடி இறுகியது.

"சீ......! நீயும ஒரு மனிதனா? கல்விக்காக எனது கற்பைக் காணிக்கையாகக் கேட்க உமக்கு வெட்கமாகயில்லை? என்மானத்தை இழந்து அப்படியொரு மணவாளனைப் பெற வேண்டாம், சீ......! என்னை விட்டு விடு......!" ஆவேசத்தோடு கனக-சபை வாத்தியாரை உதறித்தள்ளினாள் ராசாத்தி. அவள் உடல் அனலாகத்தகித்தது.

"எனக்குப்படிப்பும்வேண்டாம். அந்த மூர்த்தியும் வேண்டாம். காளிராசா குடிகாரனென்றாலும் அவன் நிழலிலேயே நான் வாழ்ந்து விடுகிறேன்."

ராசாத்தி "கோ" வெனக் கத்தியபடியே வெறிபிடித்தவள் போல் கனகசபை வாத்தியர் வீட்டைவிட்டு வெளியே ஓடினாள். வெளியே......! வானம் பயங்கர வேகத்தோடு அழுது குமுறிக்கொண்டிருந்தது. இடிஇடித்தது. மின் வெட்டியது. கொட்டும் அந்தக் கொடியபேய் மழையையும் பொருட்படுத்தாது எரிமலையாகக் கொந்தளிக்கும் இதயத்தோடும் வெறிபிடித்த உணர்ச்சிகளோடும் ராசாத்தி வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தாள் தன்னை வாழ்விக்கப்போகும் நிழலைத்தேடி.

பறக்குஞ் சக்தி, பறவைகளின் ஏகபோகஉரிமையன்று மற்றைய பிராணிகள் சில, பறக்கும் ஆற்றல் பெற்றவை என்பதை விளக்குகின்றார் பல்கலைக் கழக மாணவர் சிவராம். கல்லூரி மாணவர்க்குப் பயன்தரும் கட்டுரை இது.

# பறக்கும் பிராணிகள்.

- சிவராம் -

இவ்வுலகிலே வாழும் உயிரினங்களில் பறவைகள் தான் ஆகாயத்தில் இன்பமாக பறந்து உல்லாச வாழ்க்கை வாழ்கின்றன என்று எண்ணுவது தவறுகும பாலூட்டிகள் [Mammals] மீன்கள் [Fishes] ஊர்வன [Reptile] பூச்சிகள் [Insects] போன்றவற்றில் சில இனங்கள் வானில் பறக்குஞ் சக்தியைக் கொண்டுள்ளன என்பது விலங்கியலார் விளக்கும் உண்மையாகும்.

மீனினத்தின் வாழ்க்கைக்குச் சற்றுப் புறம்பான வாழ்க்கை நடாத்தும் பறக்கும் மீன்கள் எனப்படும் ஒருவகை மீன்கள் கடலில் வாழ்கின்றன, இவற்றில் எக்ஸோசீடஸ், [Exo coetus]சைப்சிலியூரஸ் [Cypselurus] என்பவை மிகவும் பிரசித்தமானவை ஒரு சோடி துடுப்புப்போன்ற செதில்களின் (Pectoral Fin) உதவியினுல் இம் மீன்கள் தண்ணீரின் மேற்பரப்பில் தவழ்ந்து செல்லக்கூடியன இதற்குதவியாக இச் செதில் மற்றைய மீன்களுடையதைவிட நீளமானதாயும் அகலமானதாயும் உறுதியானதாகவும் இருக்கும். இம் மீன்கள் தண்ணீரின் மேல்பரப்பில் சறுக்கிக் கொண்டு அங்குமிங்கும் பாய்ந்து செல்வதைக் கப்பல்களில் இருந்து அவதானித்தால் இம் மீன்கள் கடல் மட்டத்தின் மேல் பறப்பதைப் போலிருக்கும்.இம் மீன்கள் ஒரு பாய்ச்சலில் சுமார் நூற்றி ஐம்பது யார் தூரத்தை இருபத்தி ஐந்து மைல் வேகத்தில் (25 MPH) கடக்கக்கூடியவை.

இப்படி இம் மீன்கள் பறந்து திரிவது உண்மையில் உணவைத் தேடும் பொருட்டு அல்ல வென்பதையும், எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்வதற்காகவேதான் என்பதையும் விலங்கியலார் ஆராய்ச்சிகள் மூலம் அறிந்துள்ளார்கள்.

ஊர்வன இனத்தைச் சேர்ந்த "பறக்கும் பல்லி" [Flying Dragon] எனப்படும் பல்லியொன்று, பல்லியினங்களுக்கே புறம்பான அங்க அமைப்புக்களைக் கொண்டது. இப் பல்லியின் விலா எலும்புகள் நீளமாயிருப்பதுடன் மேல் தோலால் இறுக மூடப்பட்டிருப்பதால், இலகுவில் தத்தித்தத்திக் கொண்டும் சறுக்கிக் கொண்டும் பறக்கக் கூடியதாகவிருக்கின்றது. இதனுலே இதற்குப் பறக்கும் பல்லி யென்ற பெயர் எற்பட்டது.

பாலூட்டிகள் (Mammal)என

**கலைச்செல்வி**

மாத இதழ்

சந்தா விபரம்

தனிப்பிரதி: 25சதம்

ஆண்டுச் சந்தா: 3ரூபா

ஓராண்டிற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கலைச்செல்வி

புகையிரத நிலைய வீதி,

சுன்னாகம்


படும் மிருகங்களிலும் சில வானில் பறந்து திரிகின்றன. வௌவால்கள் பறக்கும் பாலூட்டிகளே! வௌவால்களில் எத்தனையோ விதமான இனங்கள் உள்ளன. அனைததும் பறவைகளைப் போன்று பறக்கவல்லன. உதாரணமாக பழவௌவால்கள் [Fruit Bats or Flying Foxes] பூச்சி வௌவால்கள் [Insectivorous Bats] போன்றவை மிகப் பிரசித்தி பெற்றவை. இவை மரங்களிலும் இருண்ட- பாழடைந்த கட்டிடங்களிலும் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். வௌவால்களின் கைகளுக்கும், கால்களுக்கும் இடையிலும் மிகவும் நீண்ட கைவிரல்களுக்கிடையிலும் விரிக்கவும் மடிக்கவும் கூடியதாக மேல்த் தோல் அமைந்துள்ளது. இப்பரந்த மேல்த்தோலில் அடுத்து அடுத்து மேலுங் கீழுமாக ஏற்படுத்தப்படும் அசைவினால் இவை பறக்கின்றன. பறவைகளைப் போன்று இறகுகள் இவ் வௌவால்களுக்குக் கிடையா. எனவே வௌவால்கள் பறவைகளைப் போன்று அதிக தூரம் பறக்க இயலாதவை. வௌவால்கள் தாம் இசைக்கும் ஒலியின் எதிரொலியைக்கொண்டே பறக்குந்திசையையும்தூரத்தையும் அறிகின்றன. பாலூட்டிகளிலொன்றான வௌவால், பறவைகளைப் போன்று பறந்துதிரிவது அதிசயப் படத்தக்க தொன்றாகும். இவற்றைவிடப்பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்த பறக்கும் அணில்கள் மரங்களில் தாவிப் பாய்வதோடு நில்லாமல் பறக்கவும் செய்யவல்லன. இதற்காக இவற்றின் மேல்த் தோல்கள் பரந்தும் கால்கள் வரை நீண்டு மடக்கக் கூடியதாகவும் உள்ளன.

பல விதமான பூச்சிகளும் ஆகாயத்தில் உல்லாசமாகப் பறக்கவல்லன பறக்கும் பூச்சியினங்கள் கணக்கிலடங்கா. வண்ணாத்திப்பூச்சி, தேள் பூச்சி தட்டாரப் பூச்சி பட்டுப் பூச்சி தத்துக்கிளி விதவிதமான கொசுக்கள் விதவிதமான வண்டுகள் பல்வேறு வகையான எறும்புகள் ஈக்கள் கரப்பான் பூச்சி போன்றவையெல்லாம் வானில் பறக்கக் காண்கிறோம். சிற்சில பூச்சிகளைத் தவிர மற்றவையாவும் அதிக தூரம் பறக்க முடியாதவை.

பாம்புகளில் சில வகைப்பாம்புகள் சிலயார் தூரத்திற்குப் பறந்து செல்லுந்தன்மை வாய்ந்தவை. இவை ஆபிரிக்காவின் நாடுகளில் இருப்பதைக் காணலாம்.

# கணவர்கள் ஒழிக

—மலைமான்—

## காட்சி: ஒன்று.

இடம்: பிரேமா வீடு

பாத்திரம்: பிரேமா, கணவர், கமலா

கணவர்: என்ன பிரேமா, சினிமாவிற்குத் தயாராக இருக்கச் சொன்னேனே, தயார்தானா? கிளம்புவோமா?

பிரேமா: நானு, தயார்தான், கிளம்புவோம்.

(இருவரும்போக ஆயத்தமாகும் போது கமலா வருதல்)

பிரேமா. எங்கே கிளம்பிவிட்டாய்?

கமலா உன்னைத்தான் தேடி வந்தேன்.

பிரேமா: எனனையா, என்ன என்றும் இல்லாமல் இன்று வந்திருக்கிருய்? புதிசா எதாவது இருக்கா?

கமலா: ஆமாம் மிகப் புதுவிடயம். மாதர் சங்கத்துக்குக் கூட்டிச் செல்வதற்காக வந்தேன்.

பிரேமா: இன்று மாதர் சங்கம் இருப்பதாக எனக்கு ஏதும் அறிவித்தல்கள் வரவில்லையே. நானும் இவரும் படத்துக்குப் போவதற்காகக் கிளம்பிவிட்டோம்.

கமலா: ஆமாம் அவசரக் கூட்டம் ஒன்றை நானே கூட்டும்படி காரியதரிசியைக்கேட்டேன். அதனுற்தான் இந்தக் கூட்டம்.

பிரேமா: அப்படியா, இப் போது மாதர் சங்கத்துக்கு என்ன அவசரம்?

கமலா: உன்னேடு தனிமையில் கொஞ்சம் பேசவிரும்புகிறேன்.

பிரேமா: தனிமையிலா, பரவாயில்லை, இங்கேயே சொல்லு.

(பிரேமாவின் கணவர் விலகுதல்.)

கமலா: பிரேமா. இன்று மாதர் சங்கத்தில் "பெண்கள் சுதந்திரம்" என்ற தலையங்கத்தில் பேசுவதாக உள்ளேன், கணவன்மார்களுக்கு நாம்எவ்வளவு காலத்துக்குத்தான் அடிமைகளாக இருப்பது? நமக்கும் சுதந்திரம் வேண்டாமா?

பிரேமா: என்ன கமலா பேசுகின்ருய், நீ பேசுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை.

கமலா: நீ கிணற்றுத் தவளையாகவே இருக்கின்ருயே பிரேமா. உனக்குப் பெண்கள் சுதந்திரம் என்ருலே என்ன என்று தெரியவில்லையே. பெண்களும் ஆண்களைப் போலவே சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்பது ஏன் உனக்குப் புரியவில்லை. பெண்கள் சுதந்திரத்துக்காக நீ உழைக்க முன்வரமாட்டாயா?

பிரேமா: எனக்கென்னவோ அதெல்லாம் தெரியாது. நான் சந்தோசமாக இருக்கின்றேன். அதுபோதும். ஏன், கமலா நேற்று உன் கணவருடன் ஏதாவது சண்டை பிடித்தாயா? உன் கணவர் உன்னை ஏதாவது... அடித்துக்கிடித்து......

கமலா: பிரேமா ஏன் நீ இப்படிப் பேசுகிருய்? எனக்கு முக்கியம் பெண்கள் சுதந்திரம்தான்.

பிரேமா: சுதந்திரமா, எது எப்படி இருந்தாலும் பெண்களாகிய நாம் தான் அனுசரித்துநடக்கவேண்டும். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது நாம்தானே.

(பிரேமாவின் கணவர் வரல்.)

கணவர்: என்ன பிரேமா, மாதர்

ஒளிமயமான எதிர்காலம்!

''கலைச்செல்வி'' தை - மாசி இதழில் வெளியான ''கவிதா'' எழுதிய "வாழ்க்கையின் ரகசியம்" என்னும் கதையை உள்ளம்உருக, மெய்ம்மறந்து வாசித்தேன். "கவிதா, அவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. இலக்கிய வானில் அவர் பிரகாசிப்பார்!

சுன்னுகம். சி. சிவஞானம்

சங்கமா. இல்லை படமா?

பிரேமா: படந்தான். (கமலாவிடம்) என்னை மன்னித்து விடு கமலா- இன்று என்னல் வரமுடியாது. இவர் இன்று படத்துக்குப் போவதற்காகவே ஆபீசிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டார். அவரை நான் ஏமாற்ற மாட்டேன்.

(பிரேமாவும் கணவரும் போதல்.)

கமலா: இந்தப் பிரேமாவுக்கு எப்போதும் எதுவுமே புரிவதில்லை. பெண்களும் ஆண்களைப்போலவே வாழவேண்டும் என்ற ஆசை ஏன் என்னைப்போல் இவளுக்கு இல்லை. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்தநாட்டிலே என்ற பாரதியாரின் பாடலை இவள் படிக்கவில்லைப் போலும். பரவாயில்லை. எனக்குத் துணை மற்றத் தோழிகள் இருக்கின்றனர்.

(கமலாபோதல்.)

## காட்சி : இரண்டு.

இடம்: மாதர் சங்கம்,

பாத்திரங்கள்: கமலா, வனஜா பத்மா, சீவா, கிரிசா, புனிதா, இன்னும் சிலர்.

வனஜா: மாதர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் உங்கள் எல்லோருக்கும் நல்வரவுகூறி வரவேற்கின்றேன். இனிக் காரியதரிசி கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்.

பத்மா: இது ஒரு அவசரக் கூட்டம் என்பது நீங்கள் யாபேரும் அறிந்ததே. உங்களுக்கெல்லாம்உரிய காலத்தில் அழைப்பிதழ்கள் அனுப்ப முடியவில்லை. அதற்குமன்னிக்கவும். இக் கூட்டத்தைக் கூட்டுவதற்கே: முக்கிய காரணம் கமலாதான். அவர்கள் இப்போது ''பெண்கள் சுதந்திரம்" என்ற தலையங்கத்தில் பேசுவார்கள்.

கமலா: அன்புத் தோழிகளே! உங்கள் எல்லோருக்கும் முதற்கண் எனது தாழ்மையான வணக்கம். இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து பெண்ணினம் இருந்துகொண்டே வந்திருக்கிறது. மனிதரில் மட்டுமல்ல மிருகங்கள், பறவைகள், பூச்சி புழுக்கள் எல்லாவற்றிலும் பெண்ணினம் இருந்துகொண்டே இருக்கிறது. ஏன் மரஞ் செடி கொடிகளிலும்பூக்களிலும்கூடப் பெண்ணினம் உண்டுஎன்பதை நாம் அறிவோம். இதிலிருந்து விளங்குவது என்ன? பெண்ணினம் இல்லாமல் இந்த உலகம் வாழவே முடியாது. இதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள், என எண்ணுகிறேன். இப்படியிருக்க மனிதரில் மட்டும் ஏன் பெண்ணினம் தாழ்ந்து, காலாகாலமாக, அடிமைகளாக வாழவேண்டும்? இதற்கு ஒரு முடிவு காண வேண்டாமா? முடிவு காண வேண்டும் என்பதுதான் என் எண்ணம். புரட்சிக் கவிஞர் பாரதியார்கூட பெண்கள் சுதந்திரமாய் வாழவேண்டும் என்று விரும்பிப்

பாடியிருக்கிறுர். நம்மைப் போன்ற இளம் பெண்கள் சுதந்திரமாக வாழவேண்டும். இது பற்றி உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றேன்.

கிரிஜா: தோழி கமலா பேசியதை நான் ஆமோதிக்கின்றேன். பெண்கள் சுதந்திரம் உண்மையில் அவசியமானதுதான். நாங்கள் எந்தவகையில் ஆண்களுக்கு இளைத்தவர்கள்? ஆண்களைப் போலவே வேலை செய்யும் திறமையும் இப்போது எம்மிடம் இருக்கும்போது ஏன் கலங்கவேண்டும்?

சீவா: இரு தோழியரும் பேசியது சரியே. ஆனுல் அதை நாம் எப்படி நடைமுறையில் கொண்டுவருவது? இப்போது நாங்கள் என்ன இல்லாமல் இருக்கின்ருேம்?

கமலா: சுதந்திரம் வாயளவில் இருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறையிலும் கொண்டுவரவேண்டும். அதைச் செயலாற்றுவது இப்படித்தான். நாம் இனி நம் கணவர்களுடன் முகங் கொடுத்துப் பேசக்கூடாது. அவர் ஏதாவது நம்மைச் சமாளிக்க வந்தாலும் நாம் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொள்ளவேண்டும். வீட்டில் சமையல்கூடச் செய்ய வேண்டும் என்று அவசியமில்லை. வேண்டுமானுல் அவரே சமைத்துச் சாப்பிடும்படி விட்டுவிட வேண்டும்: உங்கள் கருத்து என்ன?

கிரிஜா: ஆமாம், அப்படியே செய்வோம். அதுதான் நல்ல யோசனை

வனஜா: இதுபற்றி வேறு அபிப்பிராயங்கள் இருந்தால் கூறலாம்.

புனிதா: எனக்கென்னவோ இதெல்லாம் ஒன்றும் பிடிபடவில்லை, உங்கள் விருப்பம்எப்படியோ அப்படியே நடக்கட்டும்.

வனஜா: இத்தோடு இன்று கழகம் கலையலாம்.

## காட்சி: மூன்று

இடம்: பிரேமா வீடு

பாத்திரம்: பிரேமா, கணவர், புனிதா

(பிரேமாஇருக்கப் புனிதா வருதல்)

பிரேமா: என்ன புனிதா நேற்று மாதர் சங்கத்துக்குப் போனுயா?

புனிதா: ஆமாம்போயிருந்தேனே.

பிரேமா: என்ன நடந்தது, அங்கே? நானும் இவரும் படத்துக்குப் போகத் தயாரானபோது கமலா வந்து ஏதேதோ உளறி விட்டுப் போனுள். என்ன நடந்தது அங்கே?

புனிதா: என்ன நடந்தது? இங்கு உளறியதை அங்கும் உளறினுள். அவ்வளவுதான்.

பிரேமா: என்னதான் சொன்னுள் அவள்?

புனிதா: நாமெல்லாரும் கணவர்மாரை எதிர்த்துப் போராட வேண்டும் என்ருள். அவர்களுடன் முகம் கொடுத்துப் பேசக் கூடாதாம்.

சினிமா

கலையின் பெயரால், "கலைச் செல்வி" என்றே வெளிவரும் பத்திரிகை,சினிமாவிற்குமாத்திரம் அதிக முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை. நாடகம் போன்ற கலைகளை மக்கள் மனதிற் பதிய வைக்கவும் வளரச் செய்யவும் பகுதி வெளிவரவேண்டும். ஒரு அலட்சியபாவமின்றித் தரத்திற்கேற்ப இடமளிக்கப்படவேண்டும்.

ஏழாலை. "கலாநேசன்"

தாம் சுதந்திரமாய் வாழ வேண்டு மாம்.

பிரேமா: (சிரித்தல்) அவளுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதோ தெரியாது. சும்மா இருந்தவள் இப்படித் தொடங்கி விட்டாள். இது எங்கே போய் முடியுமோ. பாவம் கமலாவின் கணவர் மாறன் மிக நல்லவர். ஓர் அப்பாவி. அப்படியிருக்க ஏன் இவள் இப்படி ஆடுகிருள்.?

புனிதா: இன்று காலையிற்ருன் எனக்கும் விடயம் புரிந்தது பிரேமா. கமலா தாய் வீட்டுக்குப் போக வேண்டும் என்று கேட்டாளாம். அதற்கு அவர் மறுத்து விட்டாராம். பாவம், வேலை செய்யும் இடத்திலிருந்து களைத்து வந்தால் அவருக்கு அன்பாய் இரண்டு வார்த்தை சொல்ல கமலா இருக்கட்டும் என்று நினைக்கிருர் போலிருக்கிறது. இவளோ அதையே பிடித்துக் கொண்டு துடியாய்த் துடிக்கின்ருள். ஏன்தான் இவள் இப்படி எல்லாம் நடந்து கொள்கிருளோ?

பிரேமா: பாவம் இவள் இன்னும் உலகத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. எல்லாம் கொஞ்சக் காலம் போனல் சரியாகிவிடும்...... வேறு என்ன விசேடம்......

புனிதா: இந்த ஒத்துழையாமை இயக்கத்தின் பிரதி பலிப்பு எப்படி இருக்கின்றது என்று பார்ப்பதற்காக அடுத்த சனிக்கிழமையும் கூட்டம் வைத்திருக்கின்ருர்கள். நீயும் வா...

பிரேமா: நானும் வருகிறதாவது. எனக்கு வேண்டாம் இந்த வம்பெல்லாம்.

(கணவர் வருதல்)

கணவர்: இல்லை நீயும் போய் வா. நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். எனக்கு இது பற்றிக் கொஞ்சம் தெரியும். கலங்காதே.

பிரேமா: என்ன உங்களுக்கும் தெரியுமா?, நீங்கள் எங்கள் கதையை ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்றிருப்பீர்கள்,

கணவர்: எங்கள் கதையை நீங்கள் பேசினுல் நான் ஒட்டுக் கேட்பதில் தவறு என்ன இருக்கிறது?

பிரேமா: உங்கள் கதையா?

கணவர்: ஆமாம் கணவர் எதிர்ப்பு இயக்கந்தானே, இது. நானும் கூட ஒரு கணவர்தானே.

பிரேமா: நான் அப்படி எல்லாம் சொல்லமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?

கணவர்: எனக்குத் தெரியும். நீ கலங்காதே. உங்களுக்கு வால் அறுந்த நரியின் கதை தெரியுமா?

புனிதா: வாலறுந்த நரியின் கதையா தெரியாதே!

கணவர்: ஒரு வாலறுந்த நரி ஒரு நாள் தன் சக நரிகளை எல்லாம் கூட்டித்தனது பிரச்சனையைச் சொல்லியதாம். அது சொன்னது இது

---

**இருளும் ஒளியும்!**

"கலைச்செல்வி" வெளிவராக் காலத்தில் ஈழத்து இலக்கியமே இருளில் மூழ்கியிருப்பது போல உணர்வு தட்டுகின்றது. அது வெளிவரும் போது இலக்கிய விழிப்பு ஏற்படுவது போன்று உணர்கின்றேன். பலருக்கு இவ்வுணர்வு இருக்குமென்று திடமாகக் கூறுவேன்.

வேலணை. இரா. சிவச்சந்திரன்

தான்: நண்பர்களே! நாம் எல்லா ரும் வாலில்லாமல் இருந்தால் எவ்வளவு அழகாக இருப்போம், என்று எண்ணிப்பார்த்து நான் என் வாலை வெட்டி என்னை அழகு படுத்திக் கொண்டேன். நீங்களும ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்றது.

புனிதா: பிறகு என்ன நடந்தது?

கணவர்: பிறகென்ன நடந்தது! எல்லா நரிகளும் அதற் கேற்பத் தாளம் போட்டன. ஆனால் அங்கிருந்தகிழநரி ஒன்று எழுந்து அந்த வாலறுந்த நரியிடம், 'உங்களுக்குத் தெரியுமா? அறுந்த வாலை ஒட்ட வைக்கும் முனிவர் ஒருவர் இந்தக் காட்டிற்கு வந்திருக்கிறார்! என்றது. உடனே வாலறுந்த நரி 'உண்மையாகவா?,எங்கே இருக்கிறார் அவர்?' என்று அவசரப் பட்டுக் கேட்டது. அப்போது தான் விடயம் மற்ற எல்லாருக்கும் புரிந்தது.

புனிதா: அப்படி என்றால்?

கணவர்: கமலா தனக்குக் கிடைத்த தோல்விக்காக உங்கள் எல்லோரையும் குழியில் தள்ளப் பார்க்கிறாள்.

பிரேமா: இதற்கு என்ன தான் செய்வது.

கணவர்: அடுத்த சனிக்கிழமை நடக்கும் மாதர் சங்கக் கூட்டத்திற்குப் போங்கள்... பெணகளின் உண்மையான நிலைமையை அன்று அறியலாம்.

## காட்சி;நாலு

இடம்: மாதர் சங்கம்

பாத்திரங்கள்: கமலா, வனஜா, பத்மா, சீவா, கிரிஜா புனிதா, பிரேமா

வனஜா: நமது இயக்கத்தின் பிரதிபலிப்பு எப்படி இருக்கின்றது என்று பார்ப்பதற்காவே நாம் இந்தக்கூட்டத்தைக் கூடினோம். இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அனுபவங்களைக் கூறலாம்.

பத்மா: சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் எமது அனுபவத்தை நான் முதலில் கூற ஆசைப்படுகின்றேன். இங்கிருந்து வீட்டை அடைந்த அப்போதே நான் என்

# அர்த்த ராத்திரியில் அதிர்ஷ்டம் அணைத்தது!

அவர் மதுரைத் தேவார பாடசாலையின் தலைமை ஆசிரியர், ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை. மாணவர்க்குத் திருமுறை சொல்லிக் கொடுத்தல் அவரது பெரும் பணி. மதுரை மீனாக்ஷி என்றால் அவரது கண்களில் நீர் பனித்துவிடும். அந்த மீனாக்ஷியைப் பாடாத நாளெல்லாம் அவர்க்குப் பிறவா நாளே! மீனாக்ஷியம்மை திருவுள்ளம் கனிந்தது. தன் பக்தனுக்கு நல் வாழ்வு அளிக்கத் தீர்மானித்து விட்டாளோ!

இரவு படுக்கைக்குச் சென்று விட்டார் ஆசிரியர், நடுநிசி. யாரோ கதவைத் தடதட வென்று தட்டினார்கள். எழுந்து கதவைத் திறந்து பார்த்தார். இரு பிரமுகர்கள், அவர்களை வரவேற்று அமரச் செய்து விசாரித்தார் ஆசிரியர். "நாங்கள் நந்தனார் படம் எடுக்கப் போகிறோம் தாங்கள் நந்தனாக நடிக்க வேண்டும்—வந்தவர்கள் கூறினர்.

"என்ன? நானா? நடிப்பதா? பழக்கமேயில்லையே!"

"பரவாயில்லை,நீங்கள் ஒருப்பட்டாற் போதும்"

மீனாக்ஷியை வணங்கினார் ஆசிரியர். "உன்னை நம்பிச் செல்கிறேன், அருள் செய் அம்மா" என்று மதராஸ் புறப்பட்டார். அதிர்ஷ்டம் அணைத்தது பேர், புகழ், பணம்-எல்லாமே கிடைத்தது.

யார் இந்த அதிர்ஷ்டசாலி என்று தானே எண்ணுகின்றீர்கள்? அவர் வேறுயாருமல்ல, இசையுலகில் இன்று இணையற்று விளங்கும் இசையரசு தண்டபாணிதேசிகர் அவர்கள் தான்!

— ப. முத்துக்குமாரசாமி
(சங்கீதபூஷணம்)

எதிர்ப்பை ஆரம்பித்தேன். ஆனால் என் கணவரின் அன்புப் பிடிவாதத்தின் முன்னால் என்னால் நிலைத்து நிற்க முடியவில்லை.

கிரிஜா: நானும் எனது திட்டத்தை உடனேயே ஆரம்பித்தேன் அதனால் நான் அன்று முழுவதும் பட்டினி. அடுத்த நாளும் பட்டினியாகவே இருக்க விரும்பாத நான் எனது எதிர்ப்பைக் கைவிட்டு விட்டேன். நான் சமைக்காவிட்டால் என் கணவர் கடையிலேயே சாப்பிட்டு விட்டு வந்து விடுவார். என்னால் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை.

சிவா: எனது முயற்சியில் எனக்குக் கிடைத்த பலன் ...... அதை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை...... (தனது கன்னங்களைத் தடவுதல்) அன்பாக இருந்த எங்கள் இருவருக்குமிடையில் வெறுப்பு வளர்ந்ததுதான் இதனால் கிடைத்த மிச்சம். இனி எப்போது பழைய நிலைக்கு வருமோ கடவுள் தான் அறிவார்.

பிரேமா: அன்புத் தோழிகளே, நமது இந்தத் தகாத செயல் நமக்கு நாமே தோண்டிக் கொள்ளும் படுகுழி என்பதை நாம் மறந்து விடலாகாது.

கமலா: (ஆத்திரத்துடன் எழுந்து) இந்தப் பிரேமா எப்போதுமே இப்படித் தான். எதுவுமே விளங்காமல் பேசுவாள். பிரேமாவால் இதைச் செய்ய முடியாவிட்டால் பேசாமல் தன் வழியே போகட்டும். எங்கள் பாதையில் அவள் வரவேண்டாம்.

தோழிகளே! தயங்காதீர்கள். எதிர்ப்பு எந்த நல்ல காரியத்துக்கும் இருக்கத்தான் செய்யும். அதற்காக நாம் அதைக் கைவிட்டு விடலாமா? இல்லைத் தொடர்ந்து செய்வோம், நம்திட்டத்தை. வெற்றி நமக்கே.

எனக்கு என்ன நடந்தது தெரியுமா. நான் சமைக்காததினாலே என் கணவர் வீட்டிலும் சாப்பிடவில்லை. கடையிலும் சாப்பிடவில்லை, நிறை பட்டினியாகவே இருந்தார்.

(பையன் ஒருவன் ஓடி வருதல்)

பையன்: அம்மா... கமலா... அம்மா ...ஐயா காரில் அடிபட்டு உயிர் மயங்கிய நிலையில் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அவர் பிழைப்பது நிச்சயமில்லை.

கமலா: ஐயோ...... ஐயோ......அத்தான்.

## திருக்குறள் கீர்த்தனை - 20

நீரின்றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

பல்லவி

நீரில்லாமல் உலக நிலைமையாது தண்
நீரது வான்மழை இன்றி வழங்காது.


அனுபல்லவி

பாரினில் வாழ்ந்திடும் யாருக்கும் பாருக்கும்
நீரின்றேல் யாவுமே சூனியமாவதால்

சரணம்

வானின் அருள் எனவே அமுதமாக ஒழுகும்
நீரின் திறனால் இந்த நிலமது வாழ்வதன்றோ!
நானில மதனில் நாம் நல்லறம் பொருளின்பம்
நாடி நடத்துதற்கு ஏதுவதாய் அமைந்த

யாழ்ப்பாணம் க. வீரமணி




நமக்குக் கிடைத்தவை

ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்: தமிழ் எழுத்தாளர் மன்ற வெளியீடு, கிடைக்குமிடம் தமிழ்பேசும் மக்கள் பதிப்பகம், த.பெ.எண் 1183, கொழும்பு-12

விண்ணும் மண்ணும்: (சிறுகதைத் தொகுதி) தொகுப்பாசிரியர்:செம்பியன் செல்வன், பல்கலை வெளியீடு; பேராதனை

காலத்தின் குரல்கள்: (சிறுகதைத் தொகுதி);தொகுப்பாசிரியர்; கலா பரமேஸ்வரன்; பல்கலை வெளியீடு, பேராதனை.

கொய்யாக்கனிகள் (காவியம்): ஆசிரியர்- திமிலைத்துமிலன் இராஜம் பிரசுரம் ,திமிலதீவு, மட்டக்களப்பு.

போட்டிக்கதைகள்: இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

கதிரைமலைக்கோவை: ஆசிரியர் - கச்சாயூர் சி.சின்னையா தமிழ் இலக்கிய மன்றம், கச்சாய்.

மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி: ஆசிரியர்: நவாலியூர் சு சொக்கநாதன்; மூக்கவிஞர் வெளியீடு, 31, திருமலை வீதி, மாத்தளை

ஒருவரம்: (மொழிபெயர்ப்புக் கவிதைகள்): ஆசிரியர்: இ முருகையன்; பாவலர் பதிப்பகம், 151, சேர்ச் வீதி, கொழும்பு-2.

மாலா நீ என்னை மறந்துவிடு: (சிறுகதைகள்) ஆசிரியர் சீ சிவஞானசுந்தரம்,ஸ்ரீகாந்தகமல பவனம்,ஏழாலை,சுன்னாகம்:

முகிலன் கவிதைகள்: தொகுப்பாசிரியர்: மணிமொழி, வாழ் கலையரங்கம், 21, தட்டார ஒழுங்கை, கொழும்பு -12.

அண்ணல் கவிதைகள்: ஆசிரியர்,அண்ணல், அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு

உரிமை முழக்கம்: அ.அமிர்தலிங்கம் (சொற் பொழிவுகள்) தமிழ் மன்றம், வழக்கம்பரை சுழிபுரம்.

பரீட்சைச் சித்திக் கேற்ற பாஷைப் பயிற்சி: ஆசிரியர் கவிஞர் மு செல்லையா, அன்பு வெளியீடு 5, சீனியர் வீதி யாழ்ப்பாணம்.

திருவாதிரை மலர்: ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம், காரைநகர்.

நன்றிகூறுகின்றோம்.

குறிப்பு: இந்த அறிவித்தல், "கலைச்செல்வி "யில் விமர்சனம் வெளியாகும் என்பதற்கு உறுதி மொழியாகாது,

# 'விடிவு காண்போம்!'


பெரி. சண்முகநாதன்

ஈழத்தைக் கைக் கொண்டோம் உண்மை, அந்நாள்
இமயத்தில் கொடிபொறித்தோம், சான்றும் உண்டே
ஆழத்தில் முத்தெடுத்தோம் உண்மை, அந்நாள்
அயலவரும் நமைவந்து பணிந்தார் உண்மை
கீழ்த்திசையின் நாடுகளாம் கடாரம் சாவம்
கேட்டதிறை கொடுத்த செய்தி முற்றும் வாய்மை
வேழத்தின் வெண்மருப்பும் அகிலும்கூட
விளையாட்டுப் பொருள்களென விற்றோம் மெய்ம்மை.

இமைக்காமல் வாய் பிளந்து கேட்டுநிற்போம்
இப்படியே பழங்கதைகள் கூறிச்சென்றால்-
இமயத்தின் உச்சியில் நம் முன்னோர் என்றால்
இக்காலத் தமிழர் நாம் எங்கே யுள்ளோம்?
எமன்வரவுக் கேங்கிநிற்கும் நாமோ சீச்சீ!
எச்சிலிலை பறக்கின்ற குப்பை மேட்டில்
நமக்கெல்லாம் "சொத்து" இன்றே ஒன்றே ஒன்று
நயமிகுந்த நாவன்மை நன்று நன்று!

செவியினிக்க மெய்சிலிர்க்கப் பேசுகின்றோம்
செய்தொழில் இதுவரைக்கும் யாதுங்காணோம்
புவிவாழ்வு புளித்ததென மேலை நாட்டார்
புதன் செவ்வாய் சந்திரனை அணுகும்போது
தவியாக நாமிங்கே தவிக் கின்றோமே
தரமான உணவுக்கும் உடைக்கும் கூட
சுவையான உரைகேட்டுச் சொக்கிப் போனால்
சோறு எங்கே? வானிருந்து சுரக்குமோதான்?

பழங்கதைகள் பேசி இனிப் பயனேயில்லை
பாரில் நாம் உயர்ந்தோங்க வழிகள் செய்வோம்
முழங்குதமிழ்ப் பெருமைகளைப் பிறகு கேட்போம்
முக்கியமாய் வேண்டியதை முதலில் பார்ப்போம்
ஒழுங்கான நெறிவகுத்தே உழைத்தால் பின்னர்
உண்ணும் ஊன் உடுக்கும் உடை உறுதி அன்றோ?
விழுங்கி வரும் வறுமைப்பேய் தொலைந்தே போனால்
விடியாத பேரிருளும் விடியும் அன்றோ!




வ. சிவானந்தராசா, கொக்குவில்.

கே: தந்தை செல்வநாயகத்தின் பின், தமிரசுக் கட்சி அழிந்துவிடும் என்கின்றார்களே?

ப: அரசியல் எதிரிகளின் அந்தரங்க ஆசை இப்படி 'ஆரூடமா'க வெளிப்படுகின்றது! ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய தமிழரசுக் கட்சி, எப்போதுமே ஜனநாயக ரீதியிலே தான் இயங்கிவருகின்றது. உறுப்பினர்கள், தம்கருத்துவேறுபாடுகளை வெளியிடுவதற்குப் பூரண சுதந்திரம் உடையவர்களாக இருக்கின்றார்கள். இதனல், கட்சிக்கூட்டங்களில் காரசாரமானவிவாதங்கள் நடைபெறுவதுவழக்கம். இவற்றைத் தவருகப் புரிந்துகொள்ளும் மற்றக்கட்சியினர் "தமிழரசுக் கட்சியில் பிளவு" என்று கற்பனை செய்துகொண்டு அதன் அழிவை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். இப்போது கட்சியில் பின்னணியிலிருக்கும் கொள்கைக் காவலர்கள் தக்க தருணத்தில் முன்னணிக்கு வருவார்கள். ஆகவே தமிழரசுக் கட்சி என்றுமே அழியாது! நேருவிற்குப் பின் காங்கிரஸ் சரிந்துவிடும்; இந்தியா சிதைந்துவிடும் என்றார்களே, அந்த 'ஆரூடம்' பலிக்கவில்லையே!

செ. ரூபராணி, மட்டக்களப்பு.

கே. பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் வெற்றிபெறும் தமிழ் மாணவர்களுக்கு இவ்வாண்டிலே பரமேஸ்வரக் கல்லூரியிலும் இராமநாதன் கல்லூரியிலும் வகுப்புகள் நடைபெறுமா?

ப: சென்ற ஆண்டிலும் இப்படி ஒரு வதந்தி உலாவியது. இந்த இரு கல்லூரிகளிலும் ஓர் உப பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. ஆகவே தமிழ்மாணவர்கள், இவ்வாண்டிலும் பேராதனையிலுள்ள பல்கலைக் கழகத்திற்கே செல்லவேண்டியேற்படும்.

அ. சிங்காரம், வவுனியா.

கே: ச, அம்பிகைபாகன், யாரு

டைய இடத்தில் செனட்டராக நிய மிக்கப்பட்டார்?

ப: அவர் செனட்டராக நியமிக் கப்படவில்லையே! இலங்கைப் பல்க லைக் கழகத்திற்கு ஆலோசனை கூறு வதற்குப் "பல்கலைக்கழக செனட்" என்றொரு 'செனட்' இருக்கின்றது. காலஞ்சென்ற தமிழறிஞர் நடேச பிள்ளை அவர்கள் அதில் உறுப்பின ராக இருந்தார். அவருடைய இடத் திற்குத்தான் அம்பிகைபாகன் அவர் கள் இப்போது நியமிக்கப்பட்டுள் ளார். இலங்கைச் சாகித்திய மண் டலத்திலும் அவர் இடம்பெற்றுள் ளார். இக்காலத் தமிழ் இலக்கியங் களில் ஈடுபாடுடைய இவர் சாகித் திய மண்டலத்தில் இடம்பெற்றிருப் பது, எழுத்தாளர்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும் செய்திதானே!

சி. நாகரத்தினம், வண்ணார்பண்ணை

கே: சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ரசிக சபாவைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: நீண்டகாலத் தேவை ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என நினைக்கின்றேன். கலைவளர்வதற்கு ரசிகர்களின் ஆதரவும் ஒத்துழைப் பும் அவசியம். முழுக்க முழுக்க ரசிகர்களையே உறுப்பினராகவுடைய இச்சபா, கலைஞர்களுக்கு ஊக்கமும் உற்சாகமுமளித்து இசைக்கலை வளர் வதற்கு வழிவகுக்க வேண்டும். முதலில், பல்வேறு பகுதிகளிலும் சிதைந்திருக்கும் உண்மையான இசைப்பிரியர்கள் எல்லாரும் இச் சபாவில் உறுப்பினராக வேண்டும். யாழ்ரசிக சபாவில் கச்சேரி செய் வது ஒரு கௌரவம் எனக் கலைஞர் கள் கருதுமளவிற்கு நேர்மையும், ஒழுங்கும், அடக்கமும், நடுவுநிலை மையும், கலைப்பித்தும் சபா உறுப் பினர்களிடையே இருந்தால், கலைத் தேவி நிரந்தரமாக யாழ்ப்பாணத்தி லேயே கொலுவிருப்பாள்!

பெ.செல்லத்துரை, 231,மெயின் வீதி. கொழும்பு.

கே: பதினாறும் நிறையாத பரு வமங்கை என்னைக்கண்ட நேர லாம் "கண்ணாலே பேசிப்பேசிக் கொல்லாதே, காதலே கேட்டுக் கேட்டுச் செல்லாதே, அத்தான் என் மனதைவிட்டுஓடாதே" என்று பாடுகிருள், இவளை நம்ப லாமா?

ப: தங்களைக் கண்டநேரத்தில் இப்படிப் பாடுகின்ருளா, அல்லது அவள் இப்படிக் பாடிக்கொண்டிருக் கும்போதுதான் தாங்கள் அவளைக் காண்கின்றீர்களா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் அதற்குப் பின்னர்தான் இந்தப்பிரச் னையைப் பற்றிச் சிந்திக்கலாம்!

சி. அருள்மணிதேவி, திருநெல்வேலி

கே: "கலைச்செல்வி"யைக் "குமு தம்" போன்று சிறப்பாக வெளியிடு வீர்களா?

ப: குமுதத்தைக் கலைச்செல்வி யைப்போன்று வெளியிட்டாலென்ன என்று "குமுதம்" ஆசிரியரை எழு திக் கேட்குமளவிற்குக் "கலைச் செல்வி"யைச் சிறப்பாகவும், உயர் வாகவும், கவர்ச்சியாகவும், 'கன' மாகவும் வெளியிடவேண்டும் என்ற ஆசை நிறையவுண்டு. அந்த ஆசையை நிறைவேற்றப் பணந் தான் இல்லை; தங்களைப் போன்ற அபிமானம்மிக்க வாசகர்கள் பணம் கொடுத்துக் 'கலைச்செல்வி'யைவாங் கிப்படித்தால், தங்களுக்குத் தெரிந்த அனைவரையும் "கலைச்செல்வி"யின்

சந்தாதாரராக ஆக்கினால், கற்பனைக் கெட்டாத அற்புத எழிலுடன் 'கலைச்செல்வி" வெளிவருவாள்!

''ராஜன்," மாதகல்.

கே: ஆண்டுச் சந்தா மூன்று ரூபாவை அனுப்பினால், பத்திரிகையைத் தபால்மூலம் அனுப்புவீர்களா?

ப: பணத்தை, "நிர்வாகி, "கலைச்செல்வி'' புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்'' என்ற முகவரிக்கு அனுப்பி, தங்கள் பெயர், முகவரிகளையும் தெளிவாகக் குறிப்பிட்டால் ''கலைச்செல்வி" தபாலில் தங்கள் வீடுதேடி வருவாள்!

த. சிற்சபேசலிங்கம், ஏழாலைதெற்கு

கே: 1964 - 65 ஆண்டில் இலங்கைச் சாகித்திய மண்டலத்திற் பரிசு பெற்ற தமிழ் இலக்கிய எழுத்தாணி வீரர்கள் யாவர்?

ப: 1964ம் ஆண்டில் வெளியான தமிழ் நூல்களின் பரிசீலனை இப்போதுதான் நடைபெறுகின்றதாம். இவ்வாண்டு செப்டம்பர் மாதத்திற்குள் பரிசு பெற்றவர்களின் விபரம் தெரிந்துவிடும். அதுவரை பொறுமையாக இருங்கள்!

ஏ. எம். ஏ அஜீஸ், மருதமுனை.

கே: என் வாழ்க்கையிலே துன்பமெனும் புயல் வீசுகிறது. இதைத் தடுப்பதற்குஒரு வழி கூறுவீர்களா?

ப: "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதை நினைவில் வைத்திருங்கள். மனம் தளராமல், ஆத்திரப்பட்டு அவசரப்பட்டு அனைத்தையும் குட்டிச்சுவராக்காமல், பொறுமையுடனிருந்து, அந்தத் துன்பப் புயலின் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றை வேரோடு வெட்டி எறியுங்கள். வெற்றி உங்களுக்கே!

வெ. பெரியசாமி, அட்டன்.

கே: ஜெமினி கணேஷன், ஒரு கல்லூரி ஆசிரியராகஇருந்தாராமே?



ப: ஆமாம்! தாம்பரத்திலுள்ள சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் அவர் விஞ்ஞான விரிவுரையாளராகச் சிலஆண்டுகள்கடமையாற்றினார், இப்போதுங்கூட அக்கல்லூரியில் நடைபெறும் விசேட வைபவங்களிலெல்லாம் ஜெமினி கலந்துகொள்கின்றார். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உபதலைவர்களுள் ஒருவராக இருக்கின்றாரே, திரு. இராசசேகரம். அவரும் இதே கல்லூரியில் கணிதப் பேராசிரியராக இருந்துள்ளார்!

''இறைநேசன்", பாலத்துறை, அ மு. வித்தியாலயம். கொழும்பு.

கே: சிறுகதை இலக்கியத்தில் பேச்சு மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதனால், கதை வாசிக்கும் மாணவர்களின் மொழித்தரம் பாதிக்கப்படுமா?

ப: நிச்சயமாக! அச்சில் வரும் சொற்களுக்கு 'அப்பீல்' கிடையாது என்ற நம்பிக்கை இளம் உள்ளங்களில் இருக்கின்றது. கொச்சைச் சொற்களை அச்சில் பார்க்கும்போது அவை சரியானவை என்று நினைத்துவிடுகின்றார்கள் மாணவர்கள். இதனால், மரபுச் சொற்களுக்கும் கொச்சைச் சொற்களுக்கும் வேறுபாடு தெரியாமல் மயங்குகின்றார்கள். ஆகவே, மாணவர்களை, நல்ல தமிழில் எழுதப்பட்ட கதைகளைப் படிக்கச் செய்தல் வேண்டும். உறுதியான மொழியறிவு பெற்றபின் அவர்கள் எதையும் வாசிக்கலாம்!

நா. கு. குமரேசதாசன், திருநெல்வேலி.


கே: தந்தை செல்வநாயகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கிழடனைப்போல் நடக்கின்றார்; கொழும்பில் குமரனைப்போல் நடக்கின்றார். ஏன் இவர் இந்தக் கள்ள வேடம் போடவேண்டும்!



ப: அரசியல் எதிரிகள் கூடத் தந்தை செல்வநாயகத்தின் நோக்கிலும் வாக்கிலுமுள்ள நேர்மையை ஒப்புக்கொண்டு பாராட்டும்போது, தாங்கள் மட்டும் அவரிடம் கள்ள வேடத்தைக் காண்கின்றீர்கள் என்றால், தங்கள் நோக்கில் கோணலும் வாக்கில் குதர்க்கமும்தான் இருக்கின்றன என்று வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கின்றது.

தருமலிங்கம், 64, ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம்.

கே: சிவாஜி கணேஷனின் நடிப்புப்பற்றித் தங்களின் கருத்தென்ன?



ப: நடிப்புக் கலையின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும், சிறப்பிடமாகவும் திகழ்பவர் சிவாஜிகணேஷன். அவர் ஒருபாத்திரத்தை ஏற்றாரானால், அவரைவிடச் சிறப்பாக வேறெவரும் நடிக்க முடியாது என்று கூறும்படி உன்னதமாக நடிப்பார் நடிப்புக்கலைக்கு ஓர் உருவம் கொடுத்தால்அது சிவாஜி கணேஷனாகவே இருக்கும்!

"ராஜன்"மாதகல்

கே: தேவர் தயாரித்த படங்களில் சிவாஜி நடித்திருக்கிறரா? எந்தப்படத்தில்?

ப: இதுவரை நடிக்கவில்லை. காட்டு மிருகங்களிலும் கடும்போர்க் காட்சிகளிலும் நம்பிக்கை வைத்துள்ள தேவர், சிவாஜிக்கு ஏற்ற படத்தைத் தயாரிக்க விரும்புவாரா என்பது தெரியவில்லை.

சி. மகாலிங்கம் காரைநகர்.

கே; எங்கள் அபிமானப் பேச்சாளர் ஆலாலசுந்தரத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்?

ப: பழகுவதற்கு இனியவரான நண்பர் ஆலாலசுந்தரம் சென்னை மாநிலக்கல்லூரியிற் படித்துப் பட்டதாரியாகி இலங்கைச் சட்டக் கல்லூரியிற் பயின்று வழக்கறிஞராகியுள்ளார். மூதூர் இரண்டாவது எம், பி, மஜீத் சென்னையில் இவருடன் படித்தவர். திரு. திருச்செல்வம் அவர்களின் "இளைய வழக்கறிஞராகப்" பணியாற்றிய இவர் இப்போது யாழ்ப்பாணத்திலேயே தன் தொழிலை ஆரம்பித்திருக்கின்ருர். நல்ல நாடக நடிகர்; சிறந்த பேச்சாளர். அடிக்கடி "புகைப் பதை" நிறுத்திவிட்டு, வாழ்க்கையில் சற்று "சீரியஸ்"ஸாக இருந்தால், எதிர்காலம் இவருக்குத் துதி பாடும்!

த. செல்வமலர், பருத்தித்துறை.

கே: இப்போதைய உலக அதிசயமாகத் தாங்கள் எதைக் கருதுகின்றீர்கள்?

ப: ரஷ்யாவில் அரசியல் வாதிகளைப்பொறுத்தவரையில் "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென்று எண்ணவேண்டாம்" என்பது அட்சரம் பிசகாமல் நிதர்சன உண்மையாக இருக்கும்போது, ரஷ்ய மாஜிப் பிரதமர் குருஷ்சேவ் இப்போதும உயிருடனிருக்கின்ருர் என்பதும், அவருக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதும் உலகின் மாபெரும் அதிசயமாகவே எனக்குத் தோன்றுகின்றது!

வை. சி. சிவபாதம், மட்டக்களப்பு.

கே: கொழும்பு இந்து வாலிபர் சங்கத் தலைவர் சிவசிதம்பரமும் உடுப்பிட்டித் தொகுதிப் பிரதிநிதி சிவசிதம்பரமும் ஒருவர்தான?




ப: ஒருவரே தான்! தமிழிலும் சைவத்திலும் பக்தியுடையவர் மு. சிவசிதம்பரம். அதனல், தனிப்பட்ட முறையில் அவருக்குச் செல்வாக்கும் அதிகம். அரசியலில் முழு நேரமும் ஈடுபடுவதைக் குறைத்து,

சில மணி நேரத்தை கொ. இ. வா. சங்க வளர்ச்சிக்காகவும் செலவிட்டாரானால், கிறித்தவ, பௌத்த, முஸ்லிம் வாலிப இயக்கங்களைப் போன்று இந்து வாலிபர்சங்கமும் பெரிதாக வளர்ந்துவிடுமே!

குமாரி சரஸ்வதி, யாழ்ப்பாணம்.

கே: சரோஜாதேவி, நடிகர் திலகத்தைக் கல்யாணஞ் செய்யப் போகின்றார் என்பது உண்மைதானா?



ப: சென்ற மாதக் "கலைச் செல்வியில்" வெளியான சரோஜா தேவியின் பேட்டிக் கட்டுரையைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்களோ? "பாலும் பழமும்" படத்தில் டாக்டர் ரவியாகச் சிவாஜி கணேசன் நடிக்கிறாரல்லவா? அப்படியான பண்பும், பணிவும், சேவை மனப்பான்மையும் தியாக உள்ளமுமுடையஒரு டாக்டரையேகல்யாணஞ் செய்ய விரும்புவதாகத்தான் சரோஜாதேவிகூறியிருந்தார். அப்படியான ஒருவரைச் சரோஜாதேவி கண்டு பிடிக்கும்வரை, அவருடைய விவாகம் பற்றிய வதந்திகள் அடங்க மாட்டா!

எஸ். எஸ் செல்லத்துரை, எவ். எஸ். கோமஸ், ருவான்வெல்ல.

கே: இலங்கையின் இரண்டாவது தயாரிப்பு "ஆழிக்கரையின் அன்புக்காணிக்கை" என்ற தமிழ்ப் படம் வெள்ளித்திரையில் பிரகாசிக்குமா?

ப: தயாரிப்பாளர்களின் முகவரியே சரியாகத் தெரியாதபோது படத்தைப் பற்றி என்னால் என்ன கூற முடியும்? தமிழ்ப் படத் தயாரிப்பைப் பொறுத்தவரையில், இலங்கையர்கள் சிறு பிள்ளைகள். "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும், வீடு வந்து சேராது" என்றொரு மொழியும் உண்டு! இத்தயாரிப்பாளர்கள் இம்முதுமொழியைப் பொய்யாக்குவார்களா?

பௌசியா உம்மா, கட்டுக்கலை.

கே: நமது பாராளுமன்றத்தில் மிகக் குறைந்த நேரம் பேசுபவர் யார்?

ப: "பேச்சாளர்" என்ற கருத்துப்படும் Speaker என்ற ஆங்கிலப் பெயரையுடைய சபாநாயகர் தான் மிகவும் குறைந்த நேரம் பேசுபவர்! பெயருக்கும் பதவிக்கும் பொருத்தமே இல்லை என்கிறீர்களா? இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள், தாம் கூடி விவாதித்தவற்றை மன்னருக்கு அறிவிப்பதற்காகத் தம்முள் ஒருவரைத் தமது 'பேச்சாள'ராகத் தெரிவு செய்தார்கள். கூட்டம் முடிந்தபின் அவர் மன்னரிடம் சென்று எல்லாவற்றையும் அறிவிக்க வேண்டும். அதனாலேதான் அவருக்கு Speaker என்ற பெயரே ஏற்பட்டது. காலக்கிரமத்தில் அவருடைய கடமைகளில் மாற்றம் ஏற்பட்டு, இப்போது ஆகக் குறைவாகப் பேசும் ஒருவராக அவர் ஆகிவிட்டார்!

யோகமலர் இராசையா, பருத்தித்துறை.

கே: நேருவிற்கும் காந்தியடிகளுக்குமிடையே கருத்துவேற்றுமையே ஏற்பட்டதில்லையா?




ப: பல தடவை ஏற்பட்டதே! காந்தியடிகளின் சில செயல்களைக் கண்டு நேரு ஆத்திரப்பட்டு அவருடன் பேசாமற்கூட இருந்திருக்கிறார். ஆனால் காந்தியடிகள் தன் நிலைமையையும் கொள்கைகளையும் தெளிவாக விளக்கியபின், நேரு தன் அவசர புத்திக்காக வருந்தியதுமன்றி மஹாத்மாவில் முன்னிலும் பார்க்க அதிக அன்பும் செலுத்தத் தொடங்கினார். காந்தியடிகளின் இதயத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட வெகு சிலருள் நேருஜிக்குத்தான் முதலிடம் கொடுக்கலாம்.

உங்கள் கேள்விகளை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்:

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி
சுன்னாகம்.


அழகிய
தங்கப்பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்





ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

**கே. டி. எம். ஜுவல்லர்ஸ்**
நகை, வைர வியாபாரம்
67 ... யாழ்ப்பாணம்.

# பேரும் பரிசும் - 2

## சரியான விடைகள்

| | | |
|---|---|---|
| கல்கி | — | ரா. கிருஷ்ணமூர்த்தி |
| புதுமைப்பித்தன் | — | சொ. விருத்தாசலம் |
| இலங்கையர்கோன் | — | ந. சிவஞானசுந்தரம் |
| சிற்றம்பலக் கவிராயர் | — | தொ. மு. சிதம்பரரகுநாதன் |
| மஹாகவி | — | து. ருத்திரமூர்த்தி |

சென்ற இதழில் நாம் கொடுத்திருந்த புனைபெயர்களுக்குரியவர்களின் சொந்தப் பெயர்களைப் பலர் சரியாகவும் தெளிவாகவும் எழுதியனுப்பியிருந்தனர். மீண்டும் அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மாணவர்களே பெரும்பான்மையாகப் பங்குபற்றியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம். சரியான விடையனுப்பியோரின் பெயர்களை எழுதித் திருவுளச்சீட்டுமூலம் தெரிவுசெய்ததில் கீழ்க்கண்டோர் பரிசுக்குரியவர்களானார்கள்.

முதலாம் பரிசு : 10 ரூபா.
வை. அருச்சுனன்
மே/பா. S. வைத்திலிங்கம்
பேட்ரி தோட்டம்,
நோர்வுட்.

இரண்டாம் பரிசு : 5 ரூபா.
அ. சதானந்தன்
"ஆனந்த இல்லம்",
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

மூன்றாம் பரிசு : "கலைச்செல்வி" ஓராண்டுச் சந்தா.
த. சத்தியமூர்த்தி
மலைத்தோட்டம்,
தலவாக்கொல்லை.

## ஆறுதல் பரிசுகள்

1 த. தங்கராசா, 333, மெயின் வீதி, டிக்கோயா.
2 வெ. அசோகன், மொத்திகாம் தோட்டம், மஸ்கேலியா.
3 கி. பிரகலேஸ்வரி, ரேத்தஸ் புதியவீடு, மல்லிப்பு, அட்டன்.
4 சு. கணேசன், 133, கொட்டியகலை பசார், பொகவந்தலாவை.
5 வ. செல்லத்துரை, ராணியப்பு தோட்டம், கொட்டகலை.
6 மு. ஜவாகீர், 103, பத்தனை பசார், பத்தனை.
7 எம். ஆர். இராசையா, லோகில் தோட்டம், கொட்டகலை.
8 இளங்கோவன், அலகொல்லைத் தோட்டம் நோர்வூட்.
9 S. V. கிருஷ்ணசாமி, போஸ்ட் ஆபீஸ் வீதி, கொட்டகலை.
10 K. தாதன், ஹைலன்ட்ஸ் பாடசாலை, அட்டன்.
11 சீ. சரோஜினி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
12 A. அன்னம்மாள், சின்ன தொப்பிதோட்டம் அட்டன்.

இடமின்மை காரணமாக, சரியான விடையனுப்பிய ஏனைய 25 நேயர்களின் பெயர்களையும் வெளியிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்.